RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 22 செப்டம்பர் 2023 இதழ்:- 19

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## கனடா - இந்தியா இராஜதந்திர முறுகல்! இரு நாடுகளும் இராஜதந்திரிகளை வெளியேற்றியது

கனடாவில் சீக்கிய மதத்தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்திய அரசாங்கமே உள்ளது என்பதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ குற்றம் சாட்டியுள்ளார். ஜீன் மாதம் 18ம் திகதி நிஜார் பிரிட்டிஸ் கொலம்பியா வில் சீக்கிய ஆலயத்திற்கு வெளியே சுட்டுக் கொல்லப் பட்டார். இந்த கொலைக்கும் இந்திய அரசாங்கத்தி ற்கும் இடையில் நெருங்கியதொடர்புள்ளதை புலனாய்வு அமைப்புகள் கண்டு பிடித்துள்ளன என கனடா பிரதமர் தெரிவித்துள்ளார். (மேலதிக விபரங்களை 3ம், 24ம் பக்கம் பார்க்க)



BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

## தேவை நினைவு கூர்தலுக்கான பொதுக் கட்டமைப்பு “நினைவு கூர்தல்” ஒரு கட்சியின் உரிமையல்ல!



நினைவு கூர்தல் தொடர்பான பிரச்சனை மீளவும் பேசுபொருளாகி யிருக்கின்றது. கடந்த ஆண்டு, திலீபனின் நினைவு கூர்தலை முன் வைத்து, சில சர்ச்சைகள் ஏற்பட்டிருந்தன. இந்தப் பின்புலத்தில் நினைவு கூர்தல்களை பொதுக்கட்டமைப்பு ஒன்றின் ஊடாகவே மேற் கொள்ள வேண்டுமென்னும் கோரிக்கைகள் முன் வைக்கப் பட்டிரு ந்தன. ஒரு குறித்த அரசியல் கட்சியினால் (3ம் பக்கம் பார்க்க)

**இவர்களுக்காக வாருங்கள்! விபரங்கள் 12,13ம் பக்கம்**

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## திருமலையில் கஜேந்திரன் எம்.பி. தாக்கப்பட்டமைக்கு கட்சி பேதமின்றி கண்டிக்கும் தமிழ்த் தலைவர்கள்!



திருகோணமலை நோக்கி பயணித்த திலீப னின் நினைவு ஊர்தியின் மீது திருகோண மலை சர்தாபுர பகுதியில் வைத்து சில ரால் தாக்கப்பட்தோடு பாராளுமன்ற உறுப் பினர் செல்வராஜா கஜேந்திரனும் தாக்கப் பட்டுள்ள சம்பவம் கடந்த 17 செப் 2023 ஞாயிற்றுக் கிழமை மாலை இடம் பெற்று ள்ளது.

15ம்திகதி பொத்துவில் பகுதியில் இருந்து யாழ். நல்லூர் (7ம் பக்கம் பார்க்க)

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!**

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)


“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

# www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




20 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS


**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N & Conlin Rd

**Oshawa** $314,900
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University

### Tecumesh Rd E & Hall Ave


**Windsor** $349,000
Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors

### Markham & Eglinton

**Scarborough** $529,900
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!

### Dundas/Hurontario St

**Mississauga** $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building


### Bramalea Rd & Queen St

**Brampton** $590,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Finished Basement

### Lawrence & Morningside

**Scarborough** $629,900
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

### York St / Bremmer Blvd

**Toronto** $610,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Easy Access To Union Station

### Markham Rd & Denison

**Markham** $635,999
Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.

### Taunton & Ritson

**Oshawa** $699,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Upgraded floors throughout the home

### Main St. E & Russell St.

**Southgate** $999,000
Bedrooms: 4 Washrooms: 3
3063 Sq Ft Bright & Spacious Home

### Meadowvale & 401

**Scarborough** $995,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure

### Brimley Rd / St. Clair Ave


**Scarborough** $1,224,900
Bedrooms: 3+1 Washrooms: 4
All Renovated Washrooms

### Meadowvale / 401

**Scarborough** $1,799,995
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

### Bayview & Major Mac

**Richmond Hill** $1,499,900
Bedrooms: 3+1 Washrooms: 4
Lots Of Upgrades!

### 9th Line/14th Ave

**Markham** $1,799,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly Renovated Luxury Home

### Commercial/Retail


**Grey Highlands** $7,200,000
Dollarama And Tim Hortons.
Newly Built Tim Hortons Building

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# தேவை நினைவு கூர்தலுக்கான பொதுக் கட்டமைப்பு “நினைவு கூர்தல்” ஒரு கட்சியின் உரிமையல்ல!



நினைவு கூர்தல் தொடர்பான பிரச்னை மீளவும் பேசுபொருளாகியிருக்கின்றது. கடந்த ஆண்டு, திலீபனின் நினைவு கூர்தலை முன்வைத்து, சில சர்ச்சை கள் ஏற்பட்டிருந்தன.

இந்தப் பின்புலத்தில் நினைவு கூர்தல் களை பொது கட்டமைப்பு ஒன்றின் ஊடாகவே மேற்கொள்ள வேண்டுமென் னும் கோரிக்கைகள் முன் வைக்கப் பட்டிருந்தன. ஒரு குறித்த அரசியல் கட்சியினால் இவ்வாறான விடயங்கள் முன்னெடுக்கப்படுவது பொருத்தமான தல்ல.

அது தவிர்க்கப்பட வேண்டும் என் னும் நிலைப்பாட்டை முன் வைத்தே, இவ்வாறான கோரிக்கைகள் மேலெழு ந்தன. நினைவு கூர்தல்களை ஒரு கட்சி முன்னெடுக்கும் போது அது ஒரு கட்சியின் அரசியல் வேலைத் திட்டமாக நோக்கப்படும்.

அதேவேளை குறித்த நினைவு கூர்த லும் அதன் கனதியை இழந்து போகும். யுத்தம் முடிவுற்ற காலத்திலி ருந்து இந்த விடயம் விவாதிக்கப் பட்டு வருகின்றது. ஆனால் நிலை மைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

நினைவு கூர்தலின் போது கவனிக்கப் பட வேண்டிய முக்கியமான விடயம் நினைவு கூர்தல் மற்றவர்களால் மதிக் கப்படக் கூடியதாக இருக்க வேண்டும் ஒரு வேளை மதிக்கப்படக் கூடிய சூழல் இல்லாவிட்டால் கூட, அவமதிப் பிற்கு உள்ளாகக் கூடாது. அவ்வா றான சூழல் ஏற்படுவதை தவிர்க்க வேண்டும்.

நினைவு கூர்தல்களை ஒரு குறிப் பிட்ட கட்சியானது, அதன் அரசியல் செயற்பாடாக முன்னெடுக்கும் போது, குறித்த கட்சியொன்றின் செயற் பாடாகவே அது நோக்கப்படும். குறி த்த கட்சியின் மீது மாறுபட்ட பார் வையை கொண்டிருப்பவர்கள், தங்க ளது பார்வையின் ஊடாகவே நினைவு கூர்தலையும் அளவிட முற்படுவார்கள். இதன் காரணமாகவே நினைவு கூர்த லின் மதிப்பை பாதுகாப்பதற்கு, நினைவு கூர்தல்கள் ஒரு பொதுக் கட்டமைப்பின் ஊடாக நேர்தியான ஏற்பாடுகளுடன் முன்னெடுக்கப்பட வேண்டுமென்னும் கோரிக்கையை சிவில் சமூக குழுக்கள் முன் வைத் தன. அந்த முயற்சி வெற்றி பெற்றி ருந்தால் திருகோணமலையில் இடம் பெற்றது போன்றவாறான செயல்பாடு களை தவிர்த்திருக்கலாம்.

மேலும் கிழக்கு மாகாணம் மூவின மக்கள் வாழும் பகுதி எனவே அவ் வாறானதொரு சூழலில் சிங்களவர் களும் முஸ்லிம்களும் தமிழர்களின் நினைவு கூர்தலை ஆதரிப்பதற்கான வாய்ப்பில்லை. அதனை தமிழர்கள் எதிர் பார்க்கவும் முடியாது.

திருகோணமலை சம்பவம் இடம் பெற்ற போது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இருந்த காரணத்தினால் தான், தற்போது குறித்த சம்பவம் பேசு பொருளாகியிருக்கின்றது. இல்லா விட்டால் அரசாங்கம் இதனை ஒரு விடயமாகவே கருத்தில் கொண்டிரு க்காது.


நினைவு கூர்தல்களை ஒரு குறிப் பிட்ட இடத்தில் முன்னெடுப்பதே சரி யானது.

அதன் மூலமே குறித்த நினைவு கூர்தலை மதிப்பு வாய்ந்த ஒன்றாக பாதுகாக்க முடியும். அவ்வாறில்லாது, நினைவு கூர்தலை ஒரு அரசியல் வேலைத்திட்டமாக முன்னெடுத்தால், நினைவு கூர்தலின் புனிதத்தை பாது காக்க முடியாமல் போகும்.

யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து களத்திலும் புலத்திலும் நினைவு கூர்தல்கள், முட்டி மோதுதல்களுடன் தான் இடம் பெற்று வருகின்றது.

ஓர் அமைப்பு முன்னெடுக்கும் விடய த்தை பிறிதொரு அமைப்பு விமர் சிக்கும், எதிர்க்கும் போக்கே இன்று வரையில் தொடர்கின்றது. ஆரம்பத் தில் இவ்வாறான விடயங்களின் கரிசனையை காண்பித்தவர்கள் ஒரு கட்டத்திற்கு பின்னர் இதிலிருந்து ஒதுங்கி விட்டனர். நினைவு கூர்தலு க்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதன் ஊடாக மட்டுமே இந்தப் பிரச்னையை சரிசெய்ய முடி யும்.

## தமிழ்த்தேசிய முன்னணியைத் துரத்துவோம் புலனாய்வாளர்களால் மன்னாரின் சுவரொட்டி!




தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஊர்தி பவனி வடக்கு கிழக்கில் மக்களின் நினைவேந்தலுக்கு சென்று வரும் நிலையில் குறித்த நினைவேந்தல் பவனிக்கு எதிராக மன்னாரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களில் 20 செப் 2023 புதன்கிழமை அதிகாலை பரவலாக குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் என்ற பெயரில் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப் பட்டுள்ளன. குறித்த சுவரொட்டியில் மேலும் குறிப்பிடுகையில்

தமிழ் ஈழத்திற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர் தியாகம் செய்த மாவீரன் திலீபனின் தியாகத்தை விற்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமை யிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை துரத்துவோம் என குறிப்பிடப் பட்டுள்ளது. குறித்த சுவரொட்டிகள் தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் என்ற பெயரில் ஒட்டப்பட்டுள்ளது. எனினும் குறித்த சுவரொட்டிகளை மன்னார் மாவட்டத்தில் இராணுவ புலனாய்வாளர்களே ஒட்டியுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





றொரன்றோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்


அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**

# கனடாவில் சீக்கிய மதத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்திய அரசாங்கம் - கனடா குற்றச்சாட்டு! இந்திய இராஜதந்திரியையும் வெளியேற்றியது!



கனடாவில் சீக்கிய மதத்தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்திய அரசாங்கமே உள்ளது என்பதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ குற்றம் சாட்டியுள்ளார்.

ஜீன் மாதம் 18ம் திகதி நிஜார் பிரிட்டிஸ் கொலம்பியாவில் சீக்கிய ஆலயத்திற்கு வெளியே சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த கொலைக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளதை புலனாய்வு அமைப்புகள் கண்டு பிடித்துள்ளன என கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ஜி20 உச்சிமாநாட்டின் போது இந்த விடயம் குறித்து இந்திய பிரதமருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டதாக கனடா பிரதமர் தெரிவித்துள்ளார். கனடாவில் கனடா பிரஜையின் கொலையில் வெளிநாட்டு அரசாங்கத்திற்கு தொடர்புள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது இது எங்கள் இறைமையை மீறும் செயல் என கனடா பிரதமர் பொதுச் சபையில் தெரிவித்துள்ளார்.

இது சுதந்திரமான வெளிப்படையான ஜனநாய சமூகங்கள் செயற்படும் விதத்திற்கு முரணானது என அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த சில வாரங்களாக கனடா பிரஜையான ஹர்தீப் சிங் நிஜார் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கும் இந்திய முகவர்களுக்கும் தொடர்புள்ளதாக கிடைத்த நம்பதகுந்த குற்றச்சாட்டுகளை கனடாவின் பாதுகாப்பு தரப்பினர் ஆராய்ந்து வருகின்றனர்- எங்கள் அரசாங்கம் குற்றவாளிகளை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகயையும் எடுக்கும் எனவும் கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து இந்தியாவின் சிரேஸ்ட இராஜதந்திரியொருவரை கனடா தனது நாட்டிலிருந்து வெளியேற்றியது. கனடா வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜொலி இதனை உறுதி செய்துள்ளார். கனடாவிலிருந்து வெளியேற்றப்பட்ட இந்திய இராஜதந்திரி அங்குள்ள இந்திய புலனாய்வு பிரிவின் தலைவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தியாகி திலீபனை நினைவேந்துவதை எவரும் தடுக்க முடியாது கஜேந்திரனைத் தாக்கியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்



அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு சென்றுள்ள நிலையில், இங்கு திருகோணமலையில் பட்டப்பகலில் பொலிஸார் முன்னிலையில் குண்டர்கள், தமிழர்கள் மீது மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் நடத்திச் சண்டித்தனம் காட்டியுள்ளார்கள். இந்தச் சம்பவம் தொடர்பில் அரசு வெட்கித் தலை குனிய வேண்டும் என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் தியாக தீபம் திலீபனை நினைவேந்தும் ஊர்தி மீது தாக்குதல் மேற்கொண்ட குண்டர் குழு, அந்த ஊர்தியில் பயணித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மீதும், அவரின் கட்சியின் செயற்பாட்டாளர்கள் மீதும் மிலேச்சத்தனமான முறையில் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தக் கொடூர சம்பவத்தை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தியாகி திலீபனின் தியாகம் உன்னதமானது. அவரின் தியாகத்தை எவரும் கொச்சைப்படுத்த முடியாது. அவரை நினைவேந்துவதை எவரும் தடுக்க முடியாது.

பொலிஸார் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனைச் சுற்றி வளைத்து அந்தக் குண்டர்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினருக்கே பாதுகாப்பு இல்லாத இந்த நாட்டில் மக்களின் பாதுகாப்பு எப்படி இருக்கும் என்பதைச் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தத் தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்வது மட்டுமன்றி அவர்களைத் தூண்டி விட்டவர்களையும் கைது செய்ய வேண்டும். அதேவேளை, தாக்குதல் நடைபெற்றபோது அந்த இடத்தில் வேடிக்கை பார்த்த பொலிஸாருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# இவர்களுக்காக....





என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே!

திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 13 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 12 ஆண்டுகளாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வருகின்ற மகத்தான ஆதரவினால் இன்று 436 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர்களது இடர்களைக் களையவும் கல்வியை மேம்படுத்தவும் எதிர்வரும் 29 ஒக் 2023 ஞாயிற்றுக் கிழமை நடை பெற்றவுள்ள ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன் (விபரங்கள் 12ம் 13ம் பக்கம் பார்க்க)

வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனி மனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள்.

நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். நாம் வாழும் கனடிய மண்ணிலும் அனைத்துமே விலை யேற்றம் கண்டுள்ளமையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விழாவில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்களால் முடிந்தளவு பங்களிப்பை எம்முடன் தொடர்பு கொண்டு வழங்குமாறும் உங்கள் பெயர், விபரங்கள் ஈழநாடு பத்திரிகையிலும் முகநூலிலும் தவறாது வெளிவரும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

எம் தேசத்தின் எதிர்காலச் சந்ததி எம் மண்ணில் நிம்மதியாக சிறப்பாக வாழ வழி சமைப்போம்! வாரீர்!

தொடர்புகளுக்கு ஈழநாடு பரமேஸ் 416 841 9600



# கஜேந்திரன், உத்திக பிரேமரத்ன ஆகியோரின் உயிருக்கு ஆபத்து விளைவித்த சூத்திரதாரிகள் கைது செய்யப்படுவார்கள் - பிரதமர் உறுதி



மக்களின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொண்ட அனைவரும் கைது செய்யப்படுவார்கள். சம்பவங்களின் பின்னாலுள்ள சூத்திர தாரிகளும் கைது செய்யப்படுவார்கள் என பிரதமர் தினேஷ் குணவர்தன உறுதியளித்தார்.

திருகோணமலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது குண்டர் குழு தாக்குதல் நடத்தியுள்ளது. அதேவேளை அனுராதபுரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன பயணித்த வாகனம் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது, நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தாக்குவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது.

கொட்டன்கள் கொண்டு தாக்கியும், துப்பாக்கியால் சுட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த குழுவினர் கைது செய்யப்படுவார்கள். இந்தச் சம்பவங்களின் பின்னாலுள்ள சூத்திரதாரிகளும் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்படுவார்கள்.

நாட்டில் இன வன்முறையை மீண்டும் தூண்டச் சிலர் முயற்சிக்கின்றனர். அதற்கு அரசு ஒரு போதும் இடமளிக்காது என தெரிவித்தார்.

இதேவேளை திருகோணமலை கப்பல் துறை இராணுவ முகாமுக்கு அருகில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் தியாக தீபம் திலீபன் நினைவு ஊர்தி மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில், பெண்கள் இருவர் உட்பட 6 பேர் சீனன்குடா மற்றும் திருகோணமலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் நடந்த இடத்தில் எடுக்கப்பட்ட புகைப் படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான பின்னர் வாகனத் தொடரணி தம்பலகாமம் நோக்கி திரும்பிச் சென்றதுடன் செல்வராசா கஜேந்திரன் எம்.பி, தொலைபேசி ஊடாக, பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்தார். அதன் பின்னர் திருகோணமலை பொலிஸ் குழுவொன்று தம்பலகாமத்துக்கு வந்து செல்வராசா கஜேந்திரன் எம்.பியிடம் முறைப்பாட்டை பதிவு செய்த பின்னர் விசாரணையை சீனன்குடா பொலிஸாரிடம் ஒப்படைத்தது. இவ்வாறு சீனன்குடா பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நால்வரில் மூவர் திருகோணமலை விஜேசேகர புரவை வசிப்பிடமாகவும் மற்றையவர் சர்தாபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்டுள்ளனர். திருகோணமலை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரும் மனையாவெளி மற்றும் சுமேதங்கரபுர பிரதேசங்களை சேர்ந்தவர்கள் ஆவர்.

## அடிமைத்தனம் மாறாத கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்!

நாட்டின் நல்லிணக்கத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆளுநர் என்ற வகையில் தனக்கு உள்ளது என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

திலீபனின் நினைவேந்தல் ஊர்வலம் பாராளுமன்ற உறுப்பினரால் பொலிஸ் அனுமதி இன்றி சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்தை ஊடுருவி சென்றது. இது இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை இல்லாமல் ஆக்குகிறது. தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அதி கவனத்துடன் செயற்படக் கூடிய பொறுப்பு உள்ளது. அப்பொறுப்பில் அவதானக் குறைவாக செயற்படுவது நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைப்பதுடன் சட்ட ஒழுங்கும் பாதிப்படைகின்றது என்றார்.

இது இவ்வாறிருக்க கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு எதிராக



ஒரு இலட்சம் கையெழுத்துகளை திரட்டும் நடவடிக்கை ஐக்கிய சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை -நிலாவெளி, பெரிய குளம் பகுதியில் நிர்மாணிக்கப்பட விருந்த விகாரையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குமாறு கோரி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பிக்குகள் கடந்த 28ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். குறித்த விகாரை நிர்மாணிப்பதால் காணப்படும் பிரச்சினை குறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகளுக்கு அரச அதிபர் அலுவலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கம் அளிக்கப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை அனைத்து இன மக்களும் வாழும் ஒரு பிரதேசமாகும். பிக்குகளின் செயற்பாடுகள் போல் ஏனைய இனத்தவரும் இவ்வாறானதொரு செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் அதற்கு நீங்களே ஒரு முன்னுதாரணமாக செயற்படுவீர்கள் என ஆளுநர் செந்தில் தொண்டமான் இதன் போது தெரிவித்திருந்தார்.

பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப்பெற்றாலும், பிரதேச சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டுமானப் பணிகளும் முன்னெடுக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியிருந்தார். இந்நிலையில், ஆளுநரை பதவி விலக்க வேண்டுமென வலியுறுத்தியே ஒரு இலட்சம் கையெழுத்தை திரட்டும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# திருமலையில் கஜேந்திரன் எம்.பி. தாக்கப்பட்டமைக்கு கட்சி பேதமின்றி கண்டிக்கும் தமிழ்த் தலைவர்கள்!



திருகோணமலை நோக்கி பயணித்த திலீபனின் நினைவு ஊர்தியின் மீது திருகோணமலை சர்தாபுர பகுதியில் வைத்து சிலரால் தாக்கப்பட்டதோடு பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் தாக்கப் பட்டுள்ள சம்பவம் கடந்த 17 செப் 2023 ஞாயிற்றுக் கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

15ம்திகதி பொத்துவில் பகுதியில் இருந்து யாழ். நல்லூர் நோக்கிய தனது பயணத்தை தொடர்ந்த திலீபனின் நினைவு ஊர்தியானது 17 செப் 2023 மூதூர் கட்டைபறிச்சான் பகுதியில் இருந்து ஆரம்பித்து ஆலங்கேணி, தம்பலகாமம் ஊடாக திருகோணமலை நோக்கி ஏ6 பிரதான வீதியூடாக பயணித்த போது சர்தாபுர பகுதியில் வீதியில் கற்களைப் போட்டு வழிமறித்து குறித்த வாகனம் சில பெரும் பான்மையினத்தவர்களால் தாக்கப்பட்டுள்ளது.

இதன்போது வாகனத்தில் அமர்ந்திருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரனும் வாகனத்தில் இருந்து இறக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். இதன்பின்னர் திலீபனின் நினைவு ஊர்தி யானது திருகோணமலை நகருக்குள் உள் நுழைய விடாது திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. குறித்த இடத்தில் இரண்டு பொலிஸ் ஜீப் வண்டி உட்பட பஸ் ஒன்றுடன் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தது. இச்சம்பவம் தொடர்பில் பல்வேறு தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள், சிங்கள முற்போக்குவாதிகள் எனப் பலரும் தமது கருத்துக்களையும் கண்டனங்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.



சுமந்திரன்

திருகோணமலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனை ஞாயிற்றுக் கிழமை உடல் ரீதியாகத் தாக்கிய குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பொறுப்பானவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

டுவிட்டர்'எக்ஸ்' தளத்தில் இது தொடர்பாக பதிவிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், காவல்துறை அதிகாரிகள் முன்னிலையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தார். தாக்குதலின் காணொளி காட்சிகளில் சந்தேக நபர்களை அடையாளம் காண முடியும் என்று தெரிவித்துள்ள அவர்இது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறை மா அதிபரை கேட்டுக் கொண்டார்.

இந்த தாக்குதல் தொடர்பாக அதிபர் ரணில் விக்ரமசிங்க, பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரையும் குறிப்பிட்டு இப்போது உங்கள் நல்லிணக்க வாய்வீச்சை செயற்படுத்துங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.



ரிஷாட் பதியுதீன்

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதான தாக்குதலை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வன்மையாகக் கண்டித்துள்ளார். அவரது கண்டன அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, சிறுபான்மைச் சமூகங்கள் இன்னும் அடக்குமுறைக்குள் இருப்பதையே இந்தத் தாக்குதல் வெளிப்படுத்துகிறது. சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால், சிறுபான்மை மக்களின் நிலை எப்படியிருக்கும்?

பேரினவாதக் கும்பலின் அட்டகாசங்களுக்கு சிறுபான்மை மக்கள் பலியாவது அல்லது அவமானப் படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இவற்றைச் செய்யாமல் சமூக ஐக்கியம் எங்கே வரப்போகிறது?

பொலிஸாருக்கு முன்னால் இவ்வாறான அடாவடித்தனங்கள் இடம் பெறுவது சட்டவாட்சியை கேலிக்கூத்தாக்குகின்றது. சட்டத்தின் ஆட்சியை பேரினவாதக் கும்பல் கையிலெடுக்கும் நிலைமைகள் ஒழிக்கப்படாத வரை, சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பே கிடையாது. அரசியல் உரிமைகளை உணர்வு ரீதியாக மதிக்கவும் இடமில்லாத இந்த ஆட்சியில் நாம் எந்த நம்பிக்கையில் வாழப்போகிறோம்? இவ்வாறு அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.



சந்திரகுமார்

இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் பொலிஸார் முன்னிலையில் சில ரௌடிகளால் தாக்கப்படும் போது பொலிஸார் நடந்து கொண்ட விதம் மிகவும் கண்டனத்திற்குரியது என முன்னாள் பாராளுமன்ற சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

செல்வராசா கஜேந்திரன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினர், அவர் இந்த நாட்டின் ஓர் உயர்ந்த சபையின் கௌரவ உறுப்பினர் அவரை தெருவில் ஒன்று கூடிய சில ரௌடிகள் சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் முன்னிலையில் தாக்குவது என்பது மிகவும் காட்டு மிராண்டித்தனமான செயல்.

தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவருக்கே இந்த நிலைமை என்றால் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலைமை எப்படியிருக்கும்? வன்முறைகளை தடுத்து சட்டத்தை நிலை நிறுத்த வேண்டிய பொலிஸார் அந்த இடத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காது இருந்தது என்பது தமிழ் மக்கள் விடயத்தில் அவர்களின் நிலைப்பாட்டை அப்பட்டமாக காட்டி நிற்கிறது.

இது தான் இந்த நாட்டின் நிலைமை, தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக நடாத்தப் படுகிறார்கள் என்பதற்கு கஜேந்திரன் மீதான தாக்குதல் சம்பவம் என்பது ஒரு நல்ல உதாரணம் எனத் தெரிவித்த அவர் நினைவேந்தலுக்கான உரிமை வழங்கப் பட்டிருந்த நிலையில் அதனை மேற்கொள்ள விடாது வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அது மட்டுமன்றி மக்கள் பிரதிநிதி ஒருவரை வீதியில் விரட்டி விரட்டி தாக்குபவர்கள் மீதும் அந்த தாக்குதல் சம்வத்தை கட்டுப்படுத்தாது நின்ற பொலிஸார் மீதும் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## ஒரு நாளும் சிங்களவர்கள் மாறப் போவதில்லை!

இந்த நாடு 2048 அல்ல 200048 ஆனாலும் மாறப் போவதில்லை. இது சிங்கள பௌத்த நாடு என்பதும் அதில் சிங்களவர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு என்றதுமான மகாவம்ச மனோநிலையில் தூமி அளவும் கூட மாற்றமில்லை.

கடந்த ஆண்டு அரிசிக்காகவும் பருப்புக்காகவும் போராடிய சிங்களவர்கள் இன சமத்துவத்தை பேசினார்கள். இழிச்சவாய் தமிழர்களும் நல்லிணக்கம் என்று கடைப்பிடித்தார்கள். கடந்த காலங்களை மறந்து ஒரு தாய் மக்களாய் ஒன்றாய் வாழ்வோம் ஒரே பாசமழை ஆனால், நக்கிப் பழகிப் போன நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன என்பது போல அவர்கள் அரிசி பருப்பு அங்கர் பிரச்சினை முடிந்தது தான் தாமதம்.

தமிழர்களை அடித்துக்கொல்லுங்கள் இது கோசமாக வலுப்பெற்றது. 83 களில் கொழும்பு வீதிகளில் எங்களை கொன்று தார்ப்பீப்பாயில் போட்ட அதே குரல், 56, 57, 77 களில் பற தெமலு அப்பிட எப்பா என்று கத்திய அதே குரல்,

முள்ளிவாய்க்காலில் எங்கள் பிஞ்சுகளை நஞ்சுக் குண்டு போட்டு கொன்று கூவிய குரல், வெள்ளை வான் கடத்தல்களிலும் இராணுவ சுற்றிவளைப்புகளிலும் அப்பாவி இளைஞர்கள் கொல்லப்பட்ட போதும் கேட்ட அதே குரல்,

வீரமுனையில் இருந்து வல்வெட்டித்துறை வரை கிராமம் கிராமமாக எங்கள் ஊர்களில் நிகழ்த்திய படுகொலைகளில் கேட்ட அதே குரல், சில நாட்களின் முன் மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனையில் மேய்ச்சல் தரைகளை அடாத்தாய் பிடித்து வைத்திருந்த சிங்களவர்களிடம் கேட்டது.

சரி போகட்டும் என்று விட இன்று தமிழீழத் தலைநகரில் வந்தேறிய குடிகளாய் அட்டகாசம் புரியும் சிங்கள காடையர் கூட்டம், தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தியை உடைக்கும் போதும் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரனை தேடித்தேடி அடிக்கும் போதும் கேட்டது. இனிமேலும் இந்த சிங்களத் துவேசமும் மகாவம்ச மனோநிலையும் மாறுமா?

நடுவீட்டில் குளிப்பாட்டி படுக்க வைத்தாலும் நாய் வாலை நிமிர்த்த முடியாதல்லவா - அது போல தான் இதுவும் ஒருநாளும் இந்தக் காடையர்கள் மாறப்போவதும் இல்லை இங்கு எந்த மாற்றம் நிகழப் போவதுமில்லை.



சிங்களப் பெண்மணி
பவானி பொன்சேகா

திருகோண மலையில் தியாகி திலீபனின் ஊர்தி தாக்கப்பட்டமையும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தாக்கப்பட்டமையும் இலங்கையில் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலிற்கான மற்றுமொரு உதாரணம் என மனித உரிமை சட்டத்தரணி பவானி பொன்சேகா டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இதனையா நல்லிணக்கம் என தெரிவிக்கின்றது எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடான சந்திப்பின் போது ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகமும் ஏனையவர்களும் இது குறித்தும் வன்முறையை தெளிவாக தூண்டும் ஏனைய விடயங்கள் குறித்தும் கேள்வி எழுப்புவார்களா என டுவிட்டரில் பதிவிட்டுள்ள பவானி பொன்சேகா இலங்கையில் ஆழமாக வேருன்றியுள்ள பிரச்சினைகளிற்கு தீர்வு காண்பதற்கு பொருளாதார மீட்சி மாத்திரம் போதுமானதல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

### மனோகணேசன்

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீது திருகோணமலையில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தையும், பாராளுமன்ற உறுப்பினர் உதிக பிரேமரத்ன மீதான அனுராதபுர துப்பாக்கி சூட்டு சம்பவத்தையும் ஒரே மாதிரியான சட்டம், ஒழுங்கு பிரச்சினையாக கருதி, விசாரித்து, குற்றவாளிகளை கைது செய்யுங்கள் என சட்டம், ஒழுங்கு துறை அமைச்சர் டிரன் அலஸிடம் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறே தான் செய்வதாக அமைச்சர் தன்னிடம் உறுதியளித்ததாக மனோ தெரிவித்தார். இது பற்றி தற்சமயம் சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தனவுக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அறிவித்ததாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

# உயிர்த்த ஞாயிறு தர்ககுதலில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதால் சர்வதேச விசாரணைக்கான சாத்தியம் குறித்து அமெரிக்கா ஆராய்வு?

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதனால் இவ்விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை நடத்துவதற்கான சாத்தியம் குறித்து தாம் ஆராய்வதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத் தொடருக்கு முன்பதாக உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்காக ஜெனிவா சென்றிருந்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அதனைத் தொடர்ந்து தற்போது அமெரிக்காவில் முக்கிய உயர்மட்ட சந்திப்புக்களில் ஈடுபட்டு வருகின்றார்.

அதன்படி கடந்த 14 செப் 2023 வியாழக்கிழமை வரை வொஷிங்டனில் தங்கியிருந்த அவர் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச்செயலர் டொனால்ட் லூ, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக், அமெரிக்கத் திறைசேரி அதிகாரிகள், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடாத்தியுள்ளார்.

குறிப்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையில இடம்பெற்ற சந்திப்பின் போது, அண்மையில் சனல்-4 செய்திச் சேவையினால் இலங்கையில்




இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட ஆவணப்படம் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டது.

அந்த ஆவணப்படத்தின் பின்னணி மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத் தன்மை, உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத்தாக்குதல்களில் அமெரிக்கர்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டவர்களும் கொல்லப்பட்டிருப்பதனால் இதனை சர்வதேச குற்றமாகக் கருதி சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடு ஆகிய விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

சனல்-4 வெளியிட்டுள்ள ஆவணப்படத்தில் அதிர்ச்சியூட்டும் தகவல்களை வெளியிட்டுள்ள ஹன்ஸீர் அஸாத் மௌலானா, இதுபற்றி ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்கனவே சாட்சியமளித்துள்ள நிலையில் அதனைப் பயன்படுத்துவதற்கான சாத்தியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இது பற்றிக் கருத்து வெளியிட்ட பெத் வான் ஸ்காக், உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத் தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதனால் இவ்விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றை நடத்துவதற்கான சாத்தியம் உண்டு எனவும், இது குறித்து தாம் ஆராய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) தலைமை அதிகாரி சமந்தா பவர் வெகுவிரைவில் இலங்கைக்கு வருகை தரவிருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது. அமெரிக்க இராஜதந்திரியான சமந்த பவர், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னர் 2013 - 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் 28ஆவது தூதுவராகக் கடமையாற்றினார்.

அமெரிக்காவின் ஆளுமை மிக்க இராஜதந்திரிகளில் ஒருவராக நோக்கப்படுபவரும், கடந்த 2016 ஆம் ஆண்டு ஃபோர்ப்ஸ் இதழால் வெளியிடப்பட்ட உலகின் பலம்பொருந்திய பெண்களின் பட்டியலில் 41ஆம் இடத்தில் இருந்தவருமான சமந்த பவர், கடந்த 2021 ஆம் ஆண்டு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த ஆண்டு இலங்கை சென்ற அவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் இலங்கை தொடர்பில் கண்காணிப்புப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டு நீண்டகாலம் கடந்திருக்கின்ற போதிலும், கடந்த காலங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடப்பாடுகள் இன்னமும் போதியளவில் பூர்த்தி செய்யப்படவில்லை. நீதியைப் பெற்றுக் கொள்வதும் காணாமல்போனோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை அறிந்து கொள்வதுமே பாதிக்கப்பட்ட தரப்பினரின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இன்னமும் தாய்மார் காணாமல்போன தமது பிள்ளையின் புகைப்படத்துடன் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். எனவே இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளில் அமெரிக்கா ஓர் துடிப்பான உறுபபினராக விளங்குவதுடன்(22ம் பக்கம் பார்க்க)



# ராஜபக்ஷாக்களுக்கு பாவமன்னிப்பு வழங்க கர்தினால் மல்கம் ரஞ்சித் விரும்புவது ஏன்?

**கட்டுரையாளர்:**
**கனடாவில் இருந்து**
**- பனங்காட்டான் -**

2010ல் மல்கம் ரஞ்சித்தின் ஏற்பாட்டில் இத்தாலிக்குச் சென்ற மகிந்த ராஜபக்ச இலங்கைக்கு ஒரு கர்தினால் வேண்டுமென கேட்டுக் கொண்டதால் மல்கம் ரஞ்சித் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். 2019ல் பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கைக்கு விஜயம் செய்தபோது பதவியிழந்திருந்த மகிந்த ராஜபக்சவை சந்திப்பதற்கு கர்தினால் மல்கம் ரஞ்சித்தே காரணமாகவிருந்தார்.

அவ்வேளை மகிந்த முன்னிலையில் பொதுப் பணிக்கென பாப்பரசரிடம் அவரால் கையளிக்கப்பட்ட சுமார் 9 மில்லியன் ரூபாவை பாப்பரசர் ஏற்க மறுத்ததன் காரணம் என்ன?

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 54வது அமர்வு கடந்த 12ம் திகதி ஆரம்பமான போது எதிர்பார்க்கப்பட்டவாறு ஓர் அறிக்கையுடன் எல்லாம் சப்பென்று போனதே கசப்பான உண்மை.

46-1 தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது பெரும் நம்பிக்கை கொடுக்கப்பட்டது. 51-1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது பொறுப்புக்கூறல், சர்வதேச நீதிப்பொறிமுறை, போர்க்கால ஆவணங்களைத் திரட்டி ஆவணப்படுத்துவதற்கான தனி அலுவலகம் ஒன்று அமைக்கப்படுவது என்று பல முன்னெடுப்புகள் காட்டப்பட்டன.

இந்த மாதம் ஆரம்பமான 54ம் அமர்வில் பொறுப்புக்கூறலுடன் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவது கோரப்பட்டது. ஆனால் சர்வதேச நீதிப்பொறி முறை என்பது காணாமல் போய்விட்டது.

முன்னைய அமர்வுகளின் போது ஏட்டிக்குப் போட்டியாக ஜெனிவா சென்ற தமிழ் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் எவரும் இம்முறை செல்லவில்லை. சில வேளை அமர்வின் இறுதி நாட்களான அக்டோபர் இரண்டாவது வாரத்தில் செல்வார்களோ தெரியாது. இலங்கை அரசாங்கமும் தங்கள் குழுவினரையோ அல்லது வெளிவிவகார அமைச்சரையோ அங்கு அனுப்பவில்லை. இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியான சுபாசினி அருணதிலக மட்டும் சகலதையும் கையாள அனுமதிக்கப்பட்டார்.

ஜெனிவா கோரும் பொறுப்புக் கூறலை இலங்கை அரசு முழுமையாக நிராகரிக்கிறது என்ற ஒற்றை வரியுடன் அனைத்தையும் தூக்கி வீசிவிட்டார். பொறுப்புக் கூறலை ஜெனிவா கூறுவது சந்தேகத்துக்குரிய ஒரு விடயமாகத் தெரிவதாகவும் இவர் சுட்டிக் காட்டினார். முன்னைய இரு தீர்மானங்களையும் இலங்கை முழுமையாக நிராகரிப்பதாகவும், ஜெனிவாவின் எழுத்து மூல அறிக்கைகளையும் பரிந்துரைகளையும் கூட இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் இவர் அழுத்திக் கூறினார்.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 51வது அமர்வின் போது பிரித்தானியா தலைமையில் அமெரிக்கா உட்பட ஏழு நாடுகளின் அனுசரணையில் 51-1 தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது. 193 அங்கத்துவ நாடுகளில் 37 இதற்கு அனுசரணை வழங்கின. உலகின் ஐந்து பிராந்தியங்களின் வழியான நாற்பத்தேழு நாடுகளுக்கு மட்டுமே வாக்குரிமை உண்டு.

51-1 வாக்கெடுப்பில் 47 நாடுகளில் 20 நாடுகள் தீர்மானத்தை ஆதாரித்தன. 7 நாடுகள் மட்டும் எதிர்த்து வாக்களித்தன. வாக்களிப்பில் பங்குபற்றிய 27ல் 20 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்ததால் 13 மேலதிக வாக்குகளால் தீர்மானம் நிறைவேறியது. வாக்களிப்பில் பங்கு பற்றாத 20 நாடுகளையும் எந்தத் தரப்புக்கும் சேர்த்துக் கொள்ள முடியாது.

ஆனால் 47 நாடுகளில் 20 மட்டுமே தீர்மானத்தை ஆதரித்தன என்றும், மிகுதி 27 நாடுகளும் இதனை ஆதரிக்க







வில்லை என்றும் இலங்கை அரசு கள்ளக்கணக்கு காட்டியது. அதனையே சரியான கணக்கென வலியுறுத்தும் வகையில், `தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்ட உள்ளடக்கங்களை ஏற்றுக்கொள்ளாத பல நாடுகள் இதனை எதிர்த்தன அல்லது வாக்களிப்பைத் தவிர்த்தன` என்று சுபாசினி அருணதிலக தமது உரையில் சுட்டியது இலங்கையின் படு கேவலமான அரசியல் போக்கை வெளிப்படுத்தியது.

அக்டோபர் 13ம் திகதி முடிவடையும் ஜெனிவா அமர்வில் புதிதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும் சாத்தியம் காணப்படவில்லை. இனிவரும் காலங்களில் மனித உரிமை ஆணையாளர்கள் வாய்ப்பாடு வாசிப்பது போன்று இலங்கை பற்றிக் குறிப்பிடுவதுடன் முற்றும் என்றாகி விடுமா அல்லது திசை மாறி நடவடிக்கைகள் செல்லுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

13ம் திருத்தத்தை முழுமையாக அமுல் செய்ய வேண்டும், விரைவாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டுமென இந்தியாவின் பிரதிநிதி மறவாமல் எடுத்துக் கூறுவதற்காகவாவது ஜெனிவா அமர்வு பயன்படுவது சில வேளை ஏமாந்திருப்பவர்களுக்கு திருப்தியைக் கொடுக்கலாம்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக சனல் - 4 வெளியிட்ட ஆவணம் ஜெனிவா காலத்தில் வெளியிடப்பட்டதால் போலும், 54வது அமர்வு பெருமளவு முக்கியத்துவம் பெறாமல் போய் விட்டது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். சனல் -4 தான் இப்போது சூடு பிடித்துள்ள பேசுக்களம். ஒவ்வொரு அரசியல்வாதியும் தங்கள் பங்குக்கு எதனையும் கூறலாம் என்றாகி விட்டது.

முள்ளிவாய்க்கால் பேரினஅழிப்பை வெளிக்கொணர்ந்த சனல் - 4 ஆவணம் வெளியான போது அதற்கு சர்வதேச விசாரணை வேண்டுமென தமிழர் தரப்பிலிருந்தே பெருங்குரல்கள் வந்தன. ஜெனிவாவும் கூட இதனை முன்னிலைப்படுத்தியே சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறையை கோரியது. அப்போது சிங்களத் தரப்பிலிருந்து இதற்குக் கடும் எதிர்ப்பு வந்தது.

அன்று, அதனை எதிர்த்தவர்கள் இன்று ஈஸ்டர் தாக்குதல் சனல் - 4 ஆவணத்துக்கு சர்வதேச விசாரணை கேட்கின்றனர். தமிழினப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை நீதிப் பொறிமுறையை 46-1 ஜெனிவா தீர்மானம் கோரியபோது அதற்கு இணைஅனுசரணை வழங்கிய நல்லாட்சி அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் அதனை மறுதலித்து நிராகரித்துவிட்டார். இதன் பெயர் தான் நீதி, இது தான் சட்ட முறைமை என்றவாறு கதை அளக்கப்படுகிறது.

ஈஸ்டர் தாக்குதலுக்கு நம்பகமான வெளியார் பங்களிப்புடன் விசாரணை தேவையென பலரும் கேட்க, இரண்டு விசாரணைக் குழுக்களை நியமிக்கப்போவதாக ரணில் தெரிவித்தார். அதன் படி ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் இரண்டு உறுப்பினர்களையும் இணைத்து ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார். அடுத்து, நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் அமைக்கப்படுமென்று தெரிவித்துள்ளார்.

ஒரு விவகாரத்துக்கு சமவேளையில் இரண்டு விசாரணைக் குழுக்கள் என்பது ரணிலின் சமயோசித யுக்தி. இரண்டு குழுக்களும் தனித்தனியாக விசாரித்து கண்டு பிடிப்பவைகளும், பரிந்துரைப்பவைகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவும், ஏறுக்கு மாறாகவுமே அமையும். இதனை எதிர்பார்த்தே இரண்டு குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

கோதபாய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது ஈஸ்டர் தாக்குதலை விசாரிக்கவென நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றினை வைத்தார். அதன் அறிக்கையும் அவரிடம் கையளிக்கப்பட்டது. அதற்கு என்னானது? ஏன் வெளியிடப்படவில்லை? எதற்காக அந்த அறிக்கையை தேடி எடுத்து பகிரங்கப்படுத்த ரணில் விரும்பவில்லை?

அந்த அறிக்கையை வெளியிடுமாறு தொடர்ச்சியாக கர்தினால் மல்கம் ரஞ்சித் கேட்டு வந்தார். அரசியலில் பிரச்சனைக்குரியவரான விமல் வீரவன்சவும் அதனைக் கேட்கிறார். அதுபற்றித் தமக்கு எதுவுமே தெரியாதது போல் மௌனம் சாதிப்பதே ரணிலின் பதில். மாறாக, ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையிலான ஆணைக்குழுவை நியமித்து விட்டு வெளிநாடு பறந்துவிட்டார்.

இந்த விவகாரத்தில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் இரட்டை நிலைப்பாடு. தொடர்ச்சியாக சர்வதேச விசாரணையையும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தி வந்த இவர், சனல் - 4 வெளியானதன் பின்னர் தமது கருதியைக் கீழிறக்கி நிலைப்பாட்டை மாற்றி விட்டார். சம்பந்தப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டால் அவர்களை மன்னிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார். இந்தத் திடீர் மனமாற்றம் எவ்வாறு வந்தது?

ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தப்பட்ட விடயங்களில் மைத்திரியும் ரணிலும் சம்பந்தப்பட்டிருப்பதாகவே அவர் எண்ணியிருந்ததாகவும், அவர்களை சட்டத்தின் பிடிக்குள் தள்ளி விடவே உரிய நடவடிக்கைகளை அவர் கேட்டு வந்ததாகவும், ஆனால் குற்றச்சாட்டில் ராஜபக்ச குடும்பம் இருப்பதால் அவர்களைக் காப்பாற்ற அவர் முனைவதாகவும் உயர்மட்ட அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. இதனை நிரூபிக்கும் வகையில் ராஜபக்ச - மல்கம் ரஞ்சித் சம்பந்தப்பட்ட சில விவகாரங்கள் பகிரங்கமானவை.

16ம் ஆசீர்வாதப்பர் பாப்பரசராக இருந்த போது முதலாவது சம்பவம் இடம் பெற்றது. மல்கம் ரஞ்சித் அவர்களின் சிபார்சில் மகிந்த ராஜபக்ச 16ம் ஆசீர்வாதிப்பரை இத்தாலியில் சந்திக்க ஏற்பாடானது. இச்சந்திப்பின் போது பாப்பரசர் என்ன கேட்பார், மகிந்த என்ன கேட்க வேண்டும் என்பவை பற்றி மல்கம் ரஞ்சித்துக்கும் மகிந்தவுக்கும் இடையே ஒத்திகை இடம்பெற்றது.

2010ம் ஆண்டு பாப்பரசர் பிரான்சிஸ் பதவியேற்ற பின்னரே மகிந்தவின் இத்தாலிய பயணம் இடம் பெற்றது. பாப்பரசருடனான மரியாதைச் சந்திப்பின் பின்னர், இலங்கைக்கு என்ன செய்யலாம் என்று பாப்பரசர் வினவியபோது, `எங்களுக்கு (இலங்கைக்கு) ஒரு கர்தினால் நியமிக்கப்பட வேண்டும்` என்று மல்கம் ரஞ்சித் அவர்கள் சொல்லிக் கொடுத்ததையே மகிந்த கூறினாராம். அடுத்த ஆறு மாதத்தில் மல்கம் ரஞ்சித் கர்தினாலாக நியமிக்கப்பட்டார். ஒரு நாடகம் திட்டமிட்டவாறு வெற்றிகரமாக நிறைவேறியது.

2015 தேர்தலில் மகிந்த தோல்வியடைய மைத்திரி ஜனாதிபதியானார். 2019ல் இரண்டு நாள் விஜயம் மேற் கொண்டு இலங்கை சென்ற பாப்பரசர் பிரான்சிஸ் அரசியல் தலைவர்களில் ஜனாதிபதியான மைத்திரியை மட்டும் சந்திப்பதாக இருந்தது. ஆனால் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் விருப்பத்தின் பேரில் மகிந்தவையும் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது மகிந்தவின் முன்னிலையில் சுமார் ஒன்பது மில்லியன் ரூபாக்களுக்கான காசோலை ஒன்றை பாப்பரசரிடம் கர்தினால் மல்கம் ரஞ்சித் கையளித்தார். இலங்கை ஆயர் சபையினால் பொதுப்பணிக்கென சேகரிக்கப்பட்ட நிதி அதுவென பாப்பரசரிடம் கூறப்பட்டது. ஆனால் பாப்பரசர் அந்தக் காசோலையை கர்தினாலிடம் திருப்பிக் கையளித்து, உங்கள் வறிய நாட்டுக்கு இதனைப் பயன்படுத்துங்கள் என்று கூறிவிட்டார்.

அந்த ஒன்பது மில்லியன் ரூபாக்களும் இரத்தக்கறை படிந்த இடத்திலிருந்து வந்தவை என்பதை பாப்பரசர் தெரிந்து கொண்டதால் அதனை ஏற்க மறுத்தார் என்பது கர்தினாலுக்கு தெரிய வந்தது.

(22ம் பக்கம் பார்க்க)

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

16 செப்டம்பர் 2023 முதல் 22 செப்டம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 100வது பிறந்த நாள் நினைவாக



### திரு முத்துத்தம்பி பேராயிரவர்

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் உயர்திரு முத்துத்தம்பி பேராயிரவர் அவர்களது 100வது பிறந்த நாள் 24 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது 100வது பிறந்த நாள் நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு முத்துத்தம்பி பேராயிரவர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திகின்றார்கள்.

## 40வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை அரசரெத்தினம்

யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு சின்னத்துரை அரசரெத்தினம் அவர்களது நாற்பதாவது ஆண்டு நினைவு நாள் 21 செப்டம்பர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சின்னத்துரை அரசரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திகின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 18 செப்டம்பர் 2023 விநாயகர் சதுர்த்தி தினமான திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக்குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 33வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 33வது ஆண்டு நினைவு நாள் 18 செப்டம்பர் 2023 விநாயகர் சதுர்த்தி தினமான திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதரர்கள் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 20வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கதிர்த்தம்பி மகேஸ்வரன்

நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கதிர்த்தம்பி மகேஸ்வரன் அவர்களது 20வது ஆண்டு நினைவு நாள் 19 செப்டம்பர் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கதிர்த்தம்பி மகேஸ்வரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி செல்லத்துரை பூவின்பராணி

திருகோணமலையைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 23 செப்டம்பர் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள்.

திருமதி செல்லத்துரை பூவின்பராணி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



14 செப்டம்பர் 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தர்மஶ்ரீ தனுஷா தம்பதிகளின் செல்வப்புதல்வி தஜானி தர்மஶ்ரீயின் 21வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி தஜானி தனது பெற்றோர்களுடனும் உடன்பிறப்புக்களுடனும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



15 செப்டம்பர் 2023 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் வாழும் செல்வன் கேசவன் விஜயதாசன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




17 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



18 செப்டம்பர் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சரோஜினி சுப்பிரமணியம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சரோஜினி சுப்பிரமணியம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைணந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




18 செப்டம்பர் 2023 திங்கட்கிழமை யாழ்.தொல்புரத்தைச் சேர்ந்த திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




18 செப்டம்பர் 2023 திங்கட்கிழமை வேலணை கிழக்கைச் சேர்ந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 33வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அவரது பெற்றோர்கள் சகோதரங்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



19 செப்டம்பர் 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பரமமூர்த்தி மங்கையற்கரசி தம்பதிகளின் செல்வப்புதல்வன் வைசாகன் பரமமூர்த்தியின் 18வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் வைசாகன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



19 செப்டம்பர் 2023 செவ்வாய்க்கிழமை நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கதிரித்தம்பி மகேஸ்வரன் அவர்களது 20வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



21 செப்டம்பர் 2023 வியாழக்கிழமை யாழ.அளவெட்டியைச் சேர்ந்த திரு சின்னத்துஐர அரசரெத்தினம் அவர்களது 40வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து





### திரு சங்கர் நல்லதம்பி

22 செப்டம்பர் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் சமூகசேவையாளரும் வர்த்தகப் பிரமுகருமான திரு சங்கர் நல்ல தம்பி அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். இன்றையதினம் தனது இல்லத்தில் மிக எளிமையாக குடும்பத்தினருடன் பிறந்த நன்நாளைக் கொண்டாடும் திரு சங்கர் நல்லதம்பி அவர்கள் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தும் அவரது உறவுகளுடன் இணைந்து ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து





### திரு சோம.சச்சிதானந்தன்

கனடாவில் வசிக்கும் சமயத் தொண்டரும் இன நல ஆர்வலரும் சமூகத் தொண்டரும் முன்னாள் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முக்கிய உறுப்பினரும் ஈழநாடு பத்திரிகையின் நல் நோக்கங்களுக்கு உறுதுணையாக வும் பக்கத் துணையாகவும் நின்று பணியாற்றும் திரு சோம.சச்சி அவர்கள் 22 செப்டம்பர் 2023 வெள்ளிக்கிழமை தனது பிறந்த நன்நாளை தனது இல்லத்தில் குடும்பத்தினருடன் அமைதியாகக் கொண்டாடுகின்றார். சச்சி அவர்கள் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது குடும் பத்தினர், உறவுகள், நண்பர்களுடன் இணைந்து ஈழநாடு வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல் 2% வட்டி (per month)
416-757-0034 • 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில் கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102 Scarborough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

நந்தா NANTHA CATERS Sri Lankan & Indian Food
BEST CATERS IN TOWN
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. I
Call 416 NANTHA 1 - 416 626 8421

N.K.S DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies •Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha 416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

RE/MAX
Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com

Century 21
JESEETHA JEGANATHAN
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!
JAY JEGANATHAN
JEYSURESH JEGANATHAN

UTHAYAS SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

GODAVARI
Truly South Indian
416-431-5577
416-901-5578
795 Markham Rd, Scarborough, ON M1H 2Y2
godavarica.com
godavaritoronto@gmail.com

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.
**லோகன் இராசையா**
416 991 1292
Can West Transport



வெள்ளி விழா கண்ட அரவிந்தனின் மெகா ரியூனேர்ஸ் இசையில்



முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின் வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை
12வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்

OCTOBER 29 2023 SUN @ 6:00PM
ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE
TORONTO
(VICTORIAL PARK & CONSUMER ROAD)

அன்பளிப்பு
**$200.00 • $100.00 • $50.00**
விழா குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்

தொடர்புகளுக்கு: ஈழநாடு பரமேஸ் - 416.841.9600
தயவு செய்து நுழைவுச்சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும்.
நிகழ்வுகள் சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.
தங்கள் ஆதரவுக்கு நன்றிகள்

பிரபல பின்னணிப் பாடகி
**சுர்முகி**

பிரபல பின்னணிப் பாடகர்
**முகேஷ்**

கனேடிய தமிழ்ப்பாடகர்கள் இணைந்து வழங்கும்

# இன்னிசை மாலை

**சிறப்பு உணவு:** ரொறன்ரோவின் முன்னணி உணவகமான **நந்தா கேற்றறிங்** வழங்கும் சிறப்பு உணவு அனைத்து பார்வையாளர்களுக்கும் வழங்கப்படும்

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd, Scarborough, ON 416.757.9111
994 Albion Rd Etobicoke, ON 647.352.2229

KANAGAAMBIKAI GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Pawning
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3, SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197

HAYHER & VASAN LITIGATION LAWYERS
CAOUTHAM VASAN
208-885 PROGRESS AVE SCARBOROUGH, ON
207-32 VILLAGE CENTRE PLACE MISSISSAUGA, ON
• Personal Injury • Real Estate • Wills and Estates • Immigration
vasan@hvlaw.ca
905-461-1515

மளிகைகளையும் மனைகளையும் வசந்தமாக்கும்
வசந்தம் சுப்பர்மார்க்கெட்
இலங்கை, இந்தியா மற்றும் பன்னாட்டு மளிகை பொருட்கள்
2900 Markham Road, Scarborough, ON M1X 0C8
416 292 8585

U Star Art
Get an Exclusive Offer With an Exciting Package!
All In One Place
Our Services
• Bridal Makeup • Bridal Saree Blouse • Bridesmaid • Flower Girls Dress • Saree Blouse • Cake Decorating • Rich Cake
PRIYA UTHAYAN
(416) 897-5816
647-945-7212

SR Reliance Auto Collision Inc.
Complete Auto Body Repairs & Painting
Rasan
Proprietor
Tel: 416-822-4272
Fax: 647-352-4272
Email: atsrasan@gmail.com
15 Granger Ave. Toronto, ON. M1K 3K9

TIMES IRON WORKS INC.
Fabricators & Erectors
Times Metals Sales

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.
**சாந்தா பஞ்சலிங்கம்**
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough 309-80 Corporate Dr Scarborough, ON M1H3G5
Mississauga Branch 45-2355 Derry Road Mississauga, ON L5S1V6
creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com
Tel 416.439.0224
Fax 416.439.0226

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment. 1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

SMI STANDARD MORTGAGES INC.
Tel: (416) 298-1700
Fax: (416) 754-8651
Cell: (416) 993-2638
Toll Free: 1-866 765 9427
Toll Free Fax: 1-866 765 9375
raj@smi4loan.com
www.standardmortgagesinc.com
80 Corporate Dr. Suite 307, Toronto, ON. Canada M1H 3G5
RAJ SUBRAYAM
Director

காப்புறுதி ஒன்றே!
• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance
• Mortgage Insurance • Super Visa Insurance • RESP, RRSP and TFSA
Arun KULASINGAM 416.357.2847
Life Insurance Agent
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Foresters
KABIS



Beauty Learning Academy
AGA
Canada
INVITATION
Co Presents
VIBRANT HOSPITALITY GROUP
Presents
Miss Tamil Universe 2023
TITLE SPONSOR
MUHURTHAM JEWELS
POWERED BY
SOUTHERN AROMA
ASSOCIATE SPONSER
VASANTI
Cosmetic
POWERED BY
Chapel Ridge
Miss Tamil Universe
ASSOCIATE SPONSER
WGID Inc
Live Show & Dinner
Registration at 5.00 pm.
Program starts at 6.00 pm.
September 22 nd 2023
Scarborough Convention Center
Toronto, Canada
20 Torham Pl, Scarborough
on M1X0B5, Canada
Come and be the witness of the
coronation of Miss Tamil Universe 2023
Contact : +1 (416) 677 5511

# சனல் 4 திறந்திருக்கும் வாய்ப்புக்கள்!

சனல் நாலு வெளியிட்ட வீடியோவை முதலில் அதிகமாக பரவலாக்கியதும் பரப்பியதும் சாணக்கியனுக்கு ஆதரவான சமூக வலைத்தளக் கணக்குகள் தான். அந்த ஆவணப் படத்தில் பிள்ளையானுக்கு எதிராகக் குற்றச் சாட்டுக்கள் இருப்பதனால், சாணக்கியனுக்கு ஆதரவான தரப்புகள் அதை வேகமாகவும் அதிகரித்த அளவிலும் பரப்பினார்கள். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சாணக்கியன் போன்ற தரப்புக்களிடம் பலமான சமூக வலைத்தள பிரச்சாரகக் கட்டமைப்புக்கள் உண்டு.



சாணக்கியனுக்கு ஆதரவான சமூக வலைதளக் கட்டமைப்புக் கூடாகத் தான் பிள்ளையானுக்கு எதிரான அசாத் மௌலானாவின் சாட்சியம் பரவலாக பகிரப்பட்டு வருகின்றது.

அந்த வீடியோவானது ரணிலைப் பலப்படுத்தும் மேற்கத்தய நிகழ்ச்சி நிரலின் பிரதிபலிப்பு எனலாம். அதே சமயம் அதில் தமிழ் மக்களுக்குச் சாதகமான அம்சங்கள் உண்டு. இலங்கை அரசுக் கட்டமைப்பின் நம்பகத் தன்மையை கேள்விக்குள்ளாக்கும் குற்றச்சாட்டுக்கள் அந்த வீடியோவில் உண்டு.

தமிழ்மக்கள் ஏன் பரிகார நீதியைக் கேட்கின்றார்கள் என்பதற்குத் தேவையான தர்க்கபூர்வமான சான்றுகளை அந்த வீடியோ வெளிப்படுத்துகின்றது. அந்த வீடியோவில் கூறப்படும் தகவல்கள் உண்மையா இல்லையா என்பதனை விசாரிப்பதற்கு அனைத்துலக விசாரணை வேண்டும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் கேட்கிறார். முஸ்லிம்கள் ஏற்கனவே கேட்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் சஜித் கேட்கிறார். குண்டு வெடிப்பின் போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரி கேட்கிறார். முன்னாள் படைத்தளபதியும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சரத் பொன்சேகா கேட்கிறார்.

அப்படி ஒரு விசாரணை நடக்கலாம் நடக்காமல் விடலாம். ஆனால் பொறுப்பு மிக்க பதவிகளில் இருந்தவர்களும் இருப்பவர்களும் அவ்வாறு கேட்பது என்பது இலங்கைத்தீவின் அரசுக் கட்டமைப்பின் பொறுப்புக்கூறும் தன்மையை கேள்விக்கு உட்படுத்துகின்றது. அது தமிழ்மக்களுக்குச் சாதகமானது. தமிழ் மக்கள் வேறு காரணங்களுக்காக அதாவது இனப்படுகொலைக்கு எதிரான நீதியை நிலைநாட்ட அனுத்துலக விசாரணை வேண்டும் என்று கேட்கிறார்கள். பேராயர் மல்கம் ரஞ்சித் அப்படிக் கேட்க மாட்டார். ஆனாலும் தமிழ்மக்கள் ஏன் உள்நாட்டு விசாரணையை நம்பவில்லை என்ற கேள்விக்கான விடை பேராயரின் கோரிக்கைக்குட் பொதிந்து கிடக்கின்றது.

எனவே சனல் நாலு வெளியிட்ட வீடியோவானது இலங்கையில் மேற்கு நாடுகளின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கிலானது என்பது அதன் ஒரு பரிமாணம். இன்னொரு பரிமாணம் அது தமிழ்மக்களின் நீதிக்கான போராட்டத்திற்குப் பலம் சேர்க்கின்றது என்பது.

எனது கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டது போல, சனல் நாலு வீடியோ மட்டுமல்ல. இந்தப் பூமியிலே இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக அல்லது இலங்கைத்தீவின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்கு எதிராக வெவ்வேறு நாடுகள் அனைத்துலக நிறுவனங்கள் முன்னெடுக்கும் வெவ்வேறு வகைப்பட்ட நடவடிக்கைகள் அனைத்துமே ஏதோ ஒருவிதத்தில் ஈழத் தமிழர்கள் கெட்டித்தனமாகக் கையாள வேண்டிய வாய்ப்புகள் தான். அவ்வாறான வாய்ப்புகளை வழங்கும் மேற்கத்திய மற்றும் பிராந்திய அளவிலான நகர்வுகளைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

முதலாவதாக அமெரிக்க கண்டத்தில் அங்குள்ள இரண்டு பெரிய நாடுகளாகிய அமெரிக்காவும் கனடாவும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவும் அதன் படைப்பிரதானிகள் சிலருக்கு எதிராகவும் நிர்ணயகரமான நகர்வுகளை முன்னெடுத்திருக்கின்றன. இலங்கைத் தீவின் இப்போதுள்ள படைத் தளபதியை அமெரிக்கா நாட்டுக்குள் வருவதற்கு தடை விதித்திருக்கிறது. அது போலவே முன்னாள் கடற்படை தளபதி ஒருவருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு வழக்குத் தொடுக்க முடியும். அவ்வாறு மூத்த ராஜபக்சக்கள் இருவருக்கும் எதிராக அமெரிக்காவில் வழக்கு தொடுக்கத் தேவையான வாய்ப்புகளை அந்தச் சட்டம் அதிகப்படுத்தியிருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவதாக கனடாவில் இனப்படுகொலை தொடர்பில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தவிர, மூத்த ராஜபக்சக்கள் இருவருக்கும் எதிராக இந்த ஆண்டு மார்ச் மாதம் கனடா தடைகளை விதித்திருக்கின்றது. அதன்படி அவர்கள் அந்த நாட்டில் தமது பினாமிகளின் ஊடாகக்கூட முதலீடுகளைச் செய்ய முடியாது. கனடாவின் மேற்கண்ட நடவடிக்கைகள் அங்குள்ள பலமான தமிழ் புலம்பெயர் சமூகத்தின் வாக்குகளைக் கவரும் நோக்கிலானவை என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. ஆனால் அவை அவற்றின் விளைவுகளைக் கருதிக் கூறின் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்திற்குப் பலம் சேர்ப்பவை.

மூன்றாவது நகர்வு. ஐநாவின் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஓர் அலுவலகம். இது கடந்த ஆண்டு ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 46ஷ1 தீர்மானத்தின் பிரகாரம் ஐநா மனித உரிமைகள் பேரவைக்குள் இயங்கி வருகிறது. அங்கே சேகரிக்கப்படும் தகவல்கள் என்றைக்கோ ஒரு நாள் இலங்கைக்கு எதிராக கையாளப்படத் தக்கவை.

அண்மையில் தொடங்கிய ஐநா கூட்டத்தொடரில் மனித உரிமைகள் உதவி ஆணையாளர் அந்த அலுவலகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அடையாளம் காணப்பட்ட பத்து நபர்களைப் பற்றிய விபரங்களை உறுப்பு நாடுகள் கேட்பதாகவும் குறிப்பிடுகிறார். ஏற்கனவே அமெரிக்காவும் கனடாவும் குறிப்பிட்ட சில படை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்கும் ஒரு பின்னணியில்.மேலும் பத்து பேர் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகிறது.




அந்த அலுவலகத்தால் சேகரிக்கப்படும் தகவல்களில் தமிழ்த் தரப்பு மனித உரிமை மீறல்களும் தொடர்பான தரவுகளும் இருக்கலாம்..ஏனெனில் ஐநா அதைத் தமிழ் நோக்கு நிலையில் இருந்து தொகுக்கவில்லை.சீன விரிவாக்கத்தின் கருவிகளாகக் காணப்படும் ராஜபக்ச சகோதரர்களை எப்பொழுதும் சுற்றி வளைத்து வைத்திருக்கும் ராஜதந்திர உள்நோக்கங்கள் ஐநா தீர்மானங்களில் உண்டு. ஆனாலும் தமிழ் நோக்கு நிலையில் இருந்து இலங்கைத் தீவின் அரச கட்டமைப்பும் அரசியல் பாரம்பரியமும் பொறுப்புக்கூறலுக்கு உகந்தவை அல்ல என்பதனை நிரூபிப்பதற்கு அவை உதவும்.

நான்காவது நகர்வு, இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அண்மையில் ராமேஸ்வரத்தில் வைத்துக் கூறிய கருத்துக்கள். இலங்கைத்தீவில் இடம்பெற்றது பெரிய மனிதப் படுகொலை அல்லது இனப்படுகொலை என்ற பொருள்பட அவர் கருத்து தெரிவித்திருக்கிறார். தனது ருவிற்றர் பக்கத்தில் இனப்படுகொலை என்று தமிழில் எழுதியிருந்தார். தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகளின் வாக்கு வங்கிக்குள் இருந்து ஈழ ஆதரவாளர்களைப் பிரித்து எடுப்பதற்கான ஓர் உத்தியாகத் தான் அமித் ஷா அப்படிச் சொன்னார் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் அவர் ஓர் உள்துறை அமைச்சர். அவர் அவ்வாறு கூறியிருப்பதை ஈழத்தமிழர்கள் பொருத்தமான விதங்களில் கையாளலாம். ஏற்கனவே 40 ஆண்டுகளுக்கு முன் 1983இல் அப்பொழுது இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி இந்திய நாடாளுமன்றத்தில் வைத்து இலங்கையில் நடப்பது இனப்படுகொலையேயன்றி வேறு எதுவுமில்லை என்று கூறினார்.

அடுத்த ஆண்டு அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்த சவான் இலங்கைத்தீவில் தமிழர்களுக்கு எதிராக நடப்பவற்றில் இனப்படுகொலையின் கூறுகள் உண்டு என்று கூறினார். இப்பொழுது அமித் ஷா கூறியிருக்கிறார்.

அமித்ஷா கூறியிருப்பது பெருமளவுக்கு உள்நாட்டுத் தேர்தல் தேவைகளுக்கானதாக இருக்கலாம். ஆனால் அதை ஈழத் தமிழ் நோக்கு நிலையில் இருந்து வெற்றிகரமாகக் கையாள வேண்டும். அதற்குரிய உபாயங்களை ஈழத்தமிழர்கள் வகுத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். கனடாவோ அமெரிக்காவோ அல்லது இந்திய உள்துறை அமைச்சரோ அல்லது ஐ.நாவோ அல்லது ஏனைய உலகப் பொது நிறுவனங்களோ சனல் நாலோ.தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து முடிவுகளை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அப்பாவித்தனமானது. அம்புலிமாமாக் கதை போன்றது. அரசியல் என்பது நலன்சார் உறவுகளின் இடையூடாட்டம் தான். அங்கே அறநெறி.நீதி நியாயம் போன்றவை இரண்டாம்பட்சம். உலக நாடுகளும் உலகப் பொது நிறுவனங்களும் உலகளாவிய ஊடக நிறுவனங்களும் தங்கள் தங்கள் நலன்சார் நோக்கு நிலைகளில் இருந்துதான் முடிவுகளை எடுக்கும். தமது அரசியல், பொருளாதார இராணுவ இலக்குகளை முன் வைத்தே எந்தவோர் அரசும் வெளிவிவகார முடிவுகளை எடுக்கும்.

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



ஆனால் இலங்கை சம்பந்தப்பட்ட அவர்களுடைய நகர்வுகள் ஈழத்தமிழர்கள் தமக்குச் சாதகமாகக் கையாளத் தக்கவைகளாக இருக்குமானால்.. அவற்றைப் பொருத்தமான விதத்தில் பொருத்தமான வேளைகளில் வெற்றிகரமாகக் கையாண்டு நீதிக்கான தமது போராட்டத்துக்கு எப்படி அணி சேர்க்கலாம் என்று ஈழத்தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

கடந்த மே 18ஆம் திகதியன்று கனேடியப் பிரதமர் தன்னுடைய உத்தியோக பூர்வ ருவிற்றர் பக்கத்தில் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்குச் சாதகமான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். அப்பதிவை எத்தனை லட்சம் தமிழ் மக்கள் திரும்பத் திரும்ப ரீ ருவீற் பண்ணினார்கள்? என்று ஓர் அரசியற் செயற்பாட்டாளர் கேட்டார்.

அங்கே தான் தெரிகிறது தமிழ் மக்களின் இலத்திரனியல் வலையமைப்புகளின் பலவீனம். கனேடியப் பிரதமரின் கருத்துக்கு இலங்கை உத்தியோகபூர்வமாக எதிர்ப்பு தெரிவித்திருந்தது. அதாவது அதை இலங்கை அரசுக் கட்டமைப்பு எதிர்கின்றது. அப்படியென்றால் அதைத் தமிழ் மக்கள் எப்படிக் கையாண்டிருக்க வேண்டும்? கனேடியப் பிரதமரின் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்துக்குச் சென்று அவர் அங்கே பதிவிட்டிருப்பதை திரும்பத் திரும்ப லட்சக்கணத்தில் கோடிக்கணக்கில் திரும்பத் திரும்ப ரீ ருவிற் பண்ணியிருக்க வேண்டும். அது அவருக்கு உற்சாகமூட்டும். தமிழ்மக்கள் கனடாவோடு தமது சகோதரத்துவத்தை வாஞ்சையைத் தெரிவிப்பதற்கு அது ஓர் அருமையான சந்தர்ப்பமாக இருந்தது.


அப்படிதான் அமித்ஷா தனது ருவிற்றர் பக்கத்தில் தமிழில் இனப்படுகொலை என்று பிரசுரித்திருந்ததை தமிழர்கள் தமக்குச் சாதகமாகப் பரப்பியிருந்திருக்க வேண்டும். ஆனால் எத்தனை தமிழ்க் கட்சிகள் அல்லது தமிழ் அமைப்புகள் அல்லது செயற்பாட்டாளர்கள் அதை அவ்வாறு கையாண்டன?

அது தான் பிரச்சினையே. மேற்சொன்ன வெளியுறவு வாய்ப்புக்களை வெற்றிகரமாகக் கையாளத் தேவையான ஒன்றிணைந்த கட்டமைப்புக்கள் தமிழ் மக்களிடம் இல்லை. கட்சிகளை அல்லது அரசியல் வாதிகளின் தனிப்பட்ட வாக்கு வங்கிகளைக் கட்டியெழுப்பும் நோக்கத்தோடு இலத்திரனியல் கட்டமைப்புக்கள் உண்டு. ஆனால் தேசத்தைக் கட்டியெழுப்பும் கட்டமைப்புக்கள் குறைவு. அவ்வாறான ஒன்றிணைந்த கட்டமைப்புக்கள் இல்லாத ஒரு வெற்றிடத்தில் ஈழத்தமிழர்கள் வெறுவாய் சப்பிக் கொண்டு வீர வசனம் பேசிக்கொண்டு வெளியாருக்காகக் காத்திருக்கிறார்கள்?

# மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர்

## திரு முத்துத்தம்பி பேராயிரவரின் 100வது பிறந்த நாள் நினைவாக...

24 செப்டம்பர் 2023 மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு முத்துத் தம்பி பேராயிரவர் அவர்களது 100வது பிறந்த நாளாகும். அமரர் பேராயிரவர் அவர்கள் எழுதிய பியர் ருடோ கண்ட அமைதிக் கனவும் இன்றைய நிலையும் என்ற கட்டுரையில் இருந்து சில பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



பிறந்த நாட்டில், 45 வருட ஜனநாயக சுதந்திர ஆட்சி, பேரின சர்வாதிகார இருளில் முடிந்துள்ளது. மனிதனின் அகத்தில், அவனது திறந்த தூய உள்ளத்தில் ஊறும் அன்பில் தான் சமாதான அமைதி உருவாகிறது.

அதே அகத்தினை மூடிய இருளில் தான் நிறவெறி. போர், பயங்கரவாதம் உருவாகிறது. தன்னுள் சமாதானத்தை உணர்ந்த மனிதன், அதை மேலும் அனுபவிக்க, சமாதானத்தை விரும்புகிறான். மனிதன் தனது சமாதான வேட்கை சமூகத்தால் தடை செய்யப்பட்டால், அதை அனுபவிக்க துறவியாகிறான். அல்லது எங்களைப் போல் வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்து தப்பிப் பிழைக்கிறான். அல்லது ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்த நிலையில். துப்பாக்கியில் நம்பிக்கை வைக்கிறான். இந்தநிலை இலங்கையில் உண்டு. அந்த நாட்டு அணுகு முறைகள் இங்கே ஒவ்வாது.

கனடா ஒரு திறந்த ஜனநாயக நாடு. அகதிகளுக்கு, உலகில் சிறந்த புகலிடம். முதல் தரமான கல்வித்திட்டம். U.K. U.S.A போன்று ஒரு melting pot அல்ல. அங்கே படிப்படியாக, சகல இனங்களும் உருக்குலைந்து ஒன்றாக ஒன்றுபட வேண்டும். இங்கே மனிதநேயம் கொண்ட நாகரீகமான பல்கலாச்சாரக் கொள்கை.

அண்மையில் நாம் செய்த புண்ணியம், கனேடிய அரங்கில் இரு பெரும் சிந்தனைச் சிற்பிகள் செல்வாக்கு பெற்றிருந்தனர். ஒருவர் முன்னாள் பிரதமர் பியர் ருடோ. மற்றவர் மாஷல் மக்லூகன் ரூடோ. நேருவின் நண்பர். இந்திய ஞானத்தை மதிப்பவர்.

ஒரு மனிதன் ஆத்மீகத்தில் உள்ளே ஆழமாகப் போக அவன் உலகளாவிய தன்மை பெறுகிறான் என்பது எமது பாரம்பரியக் கொள்கை. இன்றைய விஞ்ஞான தொழில் நுட்ப செய்தித் தொடர்பு சாதனங்கள், உலகத்தை ஒரு சிறிய கிராமமாக்குகின்றன. அதே போல மனிதனையும் ஒரு உலக மனிதனாக்குகின்றன என்கிறார் மாஷல் மக்லூகன். இருவரின் சிந்தனையில், ஆத்மீகமும் விஞ்ஞானமும் ஒருங்கிணைந்து cultural mosaic திட்டம் உருவானது.

ஐப்பசி மாதம் 1971 ஆண்டு, பிரதமர் ருடோ பல்கலாச்சாரத் திட்டத்தை பாராளுமன்றத்தில் பின்வருமாறு பிரகடனம் செய்தார். கனேடிய மக்களின் கலாச்சார சுதந்திரத்திற்கு சிறந்த உத்தரவாதம் பல் கலாச்சரத் திட்டம் தான். தேசிய ஒருமைபாடு, பேச்சோடு நின்று விடாது உண்மையில் உருவாக வேண்டுமாயின், அது ஒவ்வொரு தனி நபரின் கலாச்சாரத் தனித்துவத்தின் இரசனையில் பிறக்கும் தன் நம்பிக்கையில், உதிக்க வேண்டும். தனது கலாச்சாரத்தை மதிப்பவன் தான் பிற கலாச்சாரங்களையும் மதிப்பான், பகிர்ந்து கொள்வான்.

ருடோவின் திட்டத்திற்கு அமைய பாடசாலைகளில், இன்று பாரம்பரிய வகுப்புக்கள் நிலையாகி விட்டன. ஆனால், தமிழ் பெற்றோரின் அக்கறையின்மையால் விரைவில் அற்றுப் போகலாம்.


ஒரு தமிழ் பிள்ளை பல்கலாச்சாரம் உள்ள ரொரன்டோவில் தனது பாரம்பரியத்தை அறியாவிட்டால், cultural conflict உருவாகி Identity Crisis உருவாகலாம்.

தன்னை அறிய தமிழ் மொழி நன்கு உதவும். தன்னை அறிய, தன்நம்பிக்கை, கெளரவம், கம்பீரம், பிறக்கும். பிற கலாச்சாரங்களை மதிப்பான். மேலும் அப்படிப்பட்டவனை இனவெறி ஒன்றும் செய்ய முடியாது, கல்வியால் தான் உடைக்க முடியும்.

ருடோவின் கனவு சித்தப்பிரமை அல்ல. கனடாவில் அது சாத்தியமாகும்.

# சர்வதேச சமாதான நாள்:-

# 21 செப்டம்பர் 2023 வியாழக்கிழமை




சர்வதேச சமாதான நாள் செப்ரம்பர் மாதம் 21ம் திகதி வியாழக்கிழமை உலகெங்கும், 1981ம் ஆண்டு U.N. பிரகடனம் செய் தது. ஒவ்வொரு வருடமும் செப்ரம்பர் மாதம் 21ம் திகதி உலக அமைதி நாள் கொண்டாடப்படுகிறது.

பிரேம் ராவத் ரொரன்ரோவில்:

இரைச்சல் மிகு

உலகில் அமைதியைக்

காண்பது எப்படி

உள்ளத்தின் குரல்

உள்ளத்தின் குரலை கேளுங்கள்

பிரேம் ராவத் நவீன வாழ்வின் அளவு கடந்த இரைச்சல்கள், சோர்வையும், நிலை தடுமாறும் உணர்வையும் நமக்கு ஏற்படுத்தலாம். ஆனால், இந்த இரைச்சல்களைக் குறைத்து வாழ்வில் நிம்மதியைக் காண வேண்டும் என்ற தீவிர ஆர்வம் நமக்கு இருக்கிறது.

உலகப் புகழ் பெற்ற ஆசானும் நூலாசிரியருமான பிரேம் ராவத் விவேகம் நிறைந்த இப் புத்தகத்தின் மூலம் அமைதியை நாம் எல்லோரும் அனுபவிக்க முடியும் என்றும் அதற்கான ஆற்றல் நம்முள் மறைந்திருக்கிறதென்றும் கூறுகிறார். ஆனால், இந்த ஆற்றலை எப்படிச் செயற் படுத்துவதென்று நமக்குக் கற்றுத் தரப் படவில்லை என்றும் கூறுகிறார்.

நாம் இரைச்சலைக் குறைத்து உள்ளத்தின் குரலை உணர்வதின் மூலம் நம் ஒவ்வொருவரின் உள்ளேயும் இசைத்துக் கொண்டிருக்கும் நுட்பமான ஆனால் வலிமையான அமைதியின் கீதத்தைக் கேட்பதற்கு அவர் வழி காட்டுகிறார். ஒரு முறை நம்முள்ளே உள்ள குரலை உண்மையிலேயே கேட்பதற்குக் கற்றுக் கொண்டோமானால் நாம் இவ்வுலகத்தை எதிர் கொள்ளும் போதும் அமைதியை நம்மால் தக்க வைத்துக் கொள்ள முடி யும்.

உள்ளத்தின் குரல் என்னும் இந்த நூலானது ஒருவரது வாழ் நாள் ஆய்வின் உச்சமாகும். இந்தப் புத்தகம் நம் உள்ளத்தின் குரலில் நம் கவனத்தைக் குவிப்பதற்கு அடியெடுத்துக் கொடுக்கிறது. அமைதிக்கான நம் தாகத்தைத் தெரிந்து கொள்ளவும், உள்ளமைதியைப் பற்றிய நம் எதிர் பார்ப்புகளை விட்டு விடவும் அவர் ஊக்கமளிக்கிறார். ஆழமான அர்த்தமும், சிந்திக்கத் தூண்டும் கதைகளும் நிறைந்த உள்ளத்தின் குரல் என்ற இப்புத்தகம் வாசகர்களுக்கு தொன்று தொட்டு வரும் ஒரு செயல் முறையிலான அறிவு சார்ந்த விவேகத்தை அறிமுகப்படுத்துகிறது. இவ் வழியைப் பின்பற்றுவதன் மூலம் நம்மைப் பற்றியும், நம்மைச் சுற்றி உள்ளவர்கள் பற்றியும், நம் வாழ்வைப் பற்றியும் நாம் புரிந்து கொள்வதில் ஆழமான மாற்றத்தை நம்மில் கொண்டுவர முடியும் என்பதைப் பிரேம் ராவத் தெரிவிக்கிறார். ஆங்கிலத்தில் எழுதிய இந்த புத்தகம் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

Available in libraries bookstores-Amazon-centres. As hardcopies -ebook and audio.

# கனடாவிற்கு செல்லுதல்?

தமிழர் வாழ்வில் புலப்பெயர்வு மிகவும் கவர்சிகரமான ஒன்று. எவருக்கு புலம் பெயர விருப்பமில்லை என்று கேட்டால் இல்லையென்று சொல்பவர்கள் அரிதானவர்களாகவே இருக்க முடியும். அந்தளவிற்கு அது ஒரு கவர்ச்சிமிக்க வாழ்வாகி விட்டது. தமிழர் அரசியலில் தீர்க்கதரிசிகள் எவரும் இருந்ததாக தெரியவில்லை. செல்வநாயகம் தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டுமென்று ஒரு முறை கூறியிருந்தார். அதனையும் ஒரு தீக்கதரிசன பார்வையென்று கூறிவிட முடியாது. ஏனெனில், கடந்த 74 வருடகால அரசியல் நகர்வில், தமிழ் மக்களை கடவுளும் காப்பாற்றவில்லை.

இருந்ததையும் இழந்து, இருப்பதையும் பாதுகாக்க முடியாதவொரு கையறு நிலையில் தான் தமிழினம் திண்டாடிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் வாய்ப்புள்ள ஒவ்வொருவரும் எவ்வாறு மண்ணை விட்டு ஓடலாமென்றே சிந்திக்கின்றனர்.

இந்த இடத்தில் உண்மையிலேயே ஒரு தீர்க்கதரிசி பற்றி கூறுவதனால், முறிந்த பனையின் ஆசிரியர்களில் ஒருவரான, படுகொலை செய்யப்பட்ட ரஜனி திரணகமவைத் தான் குறிப்பிட முடியும். முறிந்த பனையில் பின்பக்கத்தில் சில வரிகளுண்டு. அதாவது, எரிகின்ற தேசத்தை விட்டு விட்டு ஒவ்வொரு புத்தியுள்ள மனிதனும் ஓடிக் கொண்டிருக்கின்றான். இன்றைய புலப்பெயர்வு கவர்ச்சியை உற்று நோக்கும் போது, அந்த வரிகள் தீர்க்கதரிசனம் மிக்கவைதான். அன்று ஓட ஆரம்பித்த தமிழன் ஓடுவதை நிறுத்தவேயில்லை. ஆரம்பத்தில் ஓடியவர்களுக்கு, ஓடியதற்கான காரணம் இருந்தது. இன்றோ, வெறும் வெளிநாட்டு கவர்ச்சி மட்டுமேயிருக்கின்றது.

கனடிய அரசாங்கம் அதன் குடிவரவு கொள்கையை தளர்த்தியிருக்கின்றது. ஆசியாவை சேர்ந்தவர்களுக்கு கனடாவின் கதவு சற்று அகலமாகவே திறந்திருக்கின்றது. இது தான் சந்தர்ப்பம் என்று கருதும் மத்தியவர்க்க தமிழர்கள் ஓடிக் கொண்டிருக்கின்றனர். 50 வயதை கடந்தவர்களைக் கூட ஆசை விடவில்லை. அவர்களை பொறுத்தவரையில் எங்களுடைய பிள்ளைகளுக்கு நல்லதொரு வாழ்வு கிடைக்கும் தானே என்கின்றனர்.

பல வருடங்களுக்கு முன்னர் கடனாவிற்கு குடிபெயர்ந்த கவிஞர் ஒருவர், ஒரு நேர்காணலில் கூறியதை இப்போது நினைத்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது. எதற்காக கனடா வந்தீர்கள் என்று கேட்டதற்கு அவர் கூறிய பதில், கனடா அழகானதொரு நாடு. எனது ஆய்வுகளுக்கு சிறந்த நாடு. அந்தக் கவிஞரோ, தமிழ் தேசியத்தை செப்பனிட நினைத்த அறிஞர்களில் ஒருவர். அவரைப் போன்றவர்களால் செப்பனிட முடிந்ததா என்பது வேறு விடயம். அவ்வாறான ஒருவரே, இலங்கை அசிங்கம், கனடா அழகென்று எண்ணும் போது, சாமானிய மனிதர்கள் கனடாவை எண்ணி ஆசைப்படுவதில் என்ன தவறுண்டு. வறிய நாடுகளில் வாழ்வோர், வசிதியுள்ள நாட்டை நோக்கி செல்ல எண்ணுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

தங்கள் எதிர்காலத்தை கனடாவிலும், மேற்குலக நாடுகளிலும் கழிக்க வேண்டுமென்று எண்ணும் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. பக்கத்து வீட்டிலுள்ளவர்கள், தங்களுடைய உறவினர்கள் கடனாவில் இருக்கின்ற போது, அதனைப் பார்த்து மனம் வெந்து தங்களுக்கு அந்த வாய்ப்பில்லையே என்று எண்ணும் தமிழர்கள் ஏராளம். இந்த மனோநிலை தான், வாய்ப்புக்கள் கிடைக்கும் போது, அவர்களை ஓடச் செய்கின்றது.

தமிழர் தாயகமென்று அடையாளப்படுத்தப்படும், வடக்கு கிழக்கிலிருந்து ஏற்கனவே, பன்னிரண்டு லட்சம் வரையானவர்கள் வெளியேறி விட்டனர். தொடர்ந்தும் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் பத்து வருடங்களில் தமிழ் தேசியம் பேசிக் கொண்டிருக்கும் கட்சிகளுக்கு வாக்களிப்பதற்கே குறிப்பிட்டளவான மக்கள் இருக்கப் போவதில்லை. வசதியில்லாத ஏழை மக்களே இறுதியில் தாயகத்தில் எஞ்சப் போகின்றனர். அவர்களின் பிரதான பிரச்சினை அடையாளமோ, அல்லது தேசியமாகவோ இருக்காது. அவர்களின் முதல் பிரச்சினை தாங்கள் பசியின்றி, வாழ்வதாக மட்டுமே இருக்கும்.

தமிழ் மக்கள் தங்களை தாங்களே தீர்மானித்து வாழ்வதற்கான அரசியல் ஏற்பாடு ஒன்று வேண்டும். அதன் மூலம்




மட்டும் தான், தமிழர்கள் தன்னிறைவாக வாழ முடியும். இதுதான் நமது அரசியல் சுலோகம். இந்தச் சுலோகத்திற்கு வயதோ முக்கால் நூற்றாண்டு. 1949இல் இலங்கை தமிழரசு கட்சி, அதன் ஆங்கிலப் பெயராக, சமஸ்டியை முன்நிலைப்படுத்திய காலத்திலிருந்து, எங்களது சமஸ்டி வரலாறு நீண்டு செல்கிறது. அம்புலி மாமாக் கதையில் வருகின்ற, விக்கிரமாதித்தியன் வேதாளத்திற்கு கதை சொல்வது போன்று, நாங்களும் எங்களுடைய மக்களுக்கு சமஸ்டிக் கதையை கூறி வருகின்றோம். ஆனாலும் எங்களால் ஒரு சிறிய முன்னேற்றத்தைக் கூட காண்பிக்க முடியவில்லை.

புலம்பெயர் சமூகம் பெரியதொரு பலமென்று கூறிய போதிலும் கூட, நடைமுறையில் இதுவரையில் அந்தப் பலத்தை காண்பிக்க முடியவில்லை. வடக்கு கிழக்கில் புலம்பெயர் முதலீடுகள் பெரியளவில் குவியும் போது, தமிழ் மக்கள் மத்தியில் தொழில் துறைகள் உருவாகும், அதனால் மேலதிக புலப்பெயர்வை கணிசமானளவில் தடுக்க முடியுமென்றெல்லாம் எதிர்பார்ப்புக்கள் உண்டு.

இது பற்றி பேசியவுடன், நம்மவர்கள் பலர் முன்வைக்கும் கேள்வி புலம்பெயர் முதலீடுகளுக்கு என்ன உத்தரவாதம்? உத்தரவாதம் இல்லையென்று கூறிக் கொண்டிருந்தால், இன்னும் பல தசாப்தங்களுக்கு கூறிக் கொண்டிருக்கலாம். நாம் மாற்று வழிகளை ஆராய வேண்டும். தமிழ் நாட்டில் நிறுவனங்களை பதிவு செய்து, இந்திய முதலீடாக புலம்பெயர் முதலீடுகளை கொண்டுவர முடியும். அதற்கான பாதுகாப்பை இந்திய வழங்கும். இல்லாவிட்டால், ஒரு கனடிய நிறுவனத்தின் ஊடாக, அமெரிக்க நிறுவனத்தின் ஊடாக உள்வரலாம்.

2015இல், எனது நண்பர்களின் அழைப்பில் நோர்வேக்கு சென்றிருந்த போது, இந்தக் கருத்தை, நோர்வே வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கு கூறியிருந்தேன். முதலீடுகள் தொடர்பில் அச்சமிருந்தால், நோர்வேஜிய முதலீடாகக் கொண்டு வாருங்கள். ஒரு வெளிநாட்டு முதலீடாக வரும் போது, அதற்கு சர்வதேச பாதுகாப்புண்டு. புலம்பெயர் சமூகமென்னும் அடையாளம் தேவையில்லை. குறித்த நாடுகளின் அடையாளம் மட்டும் தான் இருக்கும். இந்த அடிப்படையில் சிந்திக்காமல், அனைத்தையும் கறுப்பு வெள்ளையாக சிந்தித்தால், தாயகத்தை காப்பது வெறும் கனவாக மட்டுமே இருக்க முடியும். சாத்தியமான வழிகளில் சிந்திப்பவர்களுக்கு, அவ்வாறு சிந்திப்பவர்களை ஊக்குவிப்பதற்கு நம்மத்தியில் ஆதரவில்லை. வெறும் உணர்ச்சிப் பிளம்பாக காட்சியளிக்கும் ஆட்களே நம் மத்தியில் அதிகம். கடந்த 14 வருடங்களில் இந்த உணர்ச்சிப்பிளம்பால் எதனையாவது சாதிக்க முடிந்ததா?

ஒரு நிலப்பரப்பை பாதுகாப்பதற்கு சனத்தொகை அவசியம். சனத்தொகை வீழ்ச்சியடைந்து செல்லும் போது, அந்த நிலப்பரப்பை அடையாளப்படுத்துவதற்கான தார்மீக தகுதியை குறித்த மக்கள் கூட்டம் இழந்துவிடும். கிழக்கு மாகாணம் இன்று மூவினங்களும் வாழ்கின்ற ஒரு மாகாணம். இந்த பின்புலத்தில் ஏற்கனவே, கிழக்கு மாகாணம் தமிழர் பகுதியென்னும் அடையாளத்தை இழந்து விட்டது. நாங்கள் வேண்டுமானால் அவ்வாறு உச்சரித்துக் கொண்டு எங்களை நாங்களே ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம். கிழக்கு என்பது, இப்போது மூவின மக்களும் வாழும் பகுதி.

வடக்கு மாகாணத்தின் நிலைமையும் இன்னும் பத்துவருடங்களின் பின்னர் இப்போதிருப்பது போன்று இருப்பதற்

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



கான வாய்ப்பில்லை. யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் அதிகமான பகுதிகளில் வீடுகள் மட்டுத் தான் இருக்கும் ஒரு வேளை அந்த வீடுகளில் வெளிநாட்டு குளிர் ஒத்துக் கொள்ளாத முதியவர்கள் இருக்கலாம். இது தான் தமிழரின் நிலையென்றால், யாரை முன்னிலைப்படுத்தி, நாங்கள் அரசியல் தீர்வு தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றோம்? வசதியுள்ள மேற்குலக நாடுகளை நோக்கிச் செல்வதுதான், பெரும்பாலான தமிழரது கனவென்றால், அவ்வாறானவர்களுக்கு எதற்காக அரசியல் தீர்வு. அரசியல் தீர்வு, நமது நிலத்தை விட்டால் வேறு வழியில்லை என்பவர்களுக்கல்லவா! அடைந்தால் மகா தேவி இல்லாவிட்டால் மரண தேவி என்னும் நிலையில், சிந்தித்துக் கொண்டிருந்தால், எதிர்காலத்தில், தாயகமென்று அடையாளப்படுத்துவதற்கு எதுவுமிருக்காது. பின்னர், விகாரைகள் வருகிறதென்று, வீதிகளில் சிலர் கூடி சத்தமிடுவதில் பொருளில்லை. இன்னும் பத்து வருடங்களில் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் நாடாளுமன்ற எண்ணிக்கை பத்து தொடக்கம் பன்னிரெண்டுக்குள் முடங்கலாம். மக்கள் தொடர்ந்தும் வெளியேறிக் கொண்டிருந்தால், எங்களிடம் எஞ்சியிருக்கும் ஜனநாயக பிரதிநிதித்துவ பலத்தையும் சிறுகச் சிறுக இழப்போம். இதனை கருத்தில் கொண்டு சிந்திக்க மறுப்பவர்கள் தமிழ் மக்களுக்கு நன்மைசெய்பவர்கள் அல்லர்.



# இந்தியாவின் கையறு நிலை

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத் தொடரில், இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் அறிக்கை குறித்து கடந்த செவ்வாயன்று ஜெனிவாவுக்கான இந்தியப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே, கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இந்திய அரசாங்கத்தின் சார்பில் அவர் நிகழ்த்திய உரை, ஒரு பக்கம் ஏமாற்றத்தை வெளிப்படுத்தும் வகையிலும், இன்னொரு பக்கம் எதிர்பார்ப்பை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது. இலங்கை அரசாங்கம், வழங்கிய உறுதி மொழிகளை செயற்படுத்துவதில் முன்னேற்றங்கள் போதுமானதாக இல்லை என்பதை சுட்டிக் காட்டியிருக்கிறார் இந்திரா மணி பாண்டே.

அனைத்து பிரஜைகளின் அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கான வாக்குறுதிகளை, விரைவாக செயல்படுத்துவதற்கு, அர்த்தமுள்ள வகையில் செயற்படுமாறு, இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதாக அவர் கூறியிருக்கிறார்.

இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பது இதனூடாக வெளிப்பட்டிருக்கிறது.

1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை உடன்பாட்டின் பல உள்ளடக்கங்கள், வாக்குறுதிகள் இன்னமும் இலங்கை அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக, 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படவில்லை. அவர்களுக்கு நீதியான, அமைதியான, கௌரவமான வாழ்க்கையை அரசாங்கம் உறுதி செய்யவில்லை.

இந்திய அரசாங்கம் ஒவ்வொரு முறையும் இதனை வலியுறுத்தினாலும் கொழும்பு அதனைக் கண்டு கொள்வதில்லை.

2011 இல் இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரம் ஜெனிவாவுக்கு கொண்டு செல்லப்பட்டதில் இருந்து, தொடர்ச்சியாக இந்தியா வலியுறுத்தி வருகின்ற விடயம், தனக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்பது தான்.

ஒரு முறை மட்டுமே இலங்கை தொடர்பான ஜெனிவா தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு அளித்தது. அதுவும், காங்கிரஸ் அரசாங்கத்துக்கு தி.மு.க. கொடுத்த அழுத்தங்களால் தான் சாத்தியமானது. அதற்குப் பின்னரான எல்லா சந்தர்ப்பங்களிலும், இலங்கை தொடர்பான ஜெனிவா தீர்மானங்களுக்கு இந்தியா ஆதரவு அளிக்கவோ, எதிர்க்கவோ இல்லை. நடுநிலை வகித்து வந்திருக்கிறது.

சர்வதேச அரங்கில் இலங்கையை ஓரம் கட்டக் கூடாது என்பதற்காகவே, இந்தியா நடுநிலை என்ற என்ற நிலைப்பாட்டுக்குள் ஒளிந்திருக்க முற்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த நடுநிலை வகிப்பினால், இந்தியா தனது இலக்கை- இலங்கையில் எட்ட முடிந்திருக்கிறா என்பது தான் கேள்வி.

ஏனென்றால் 1987இற்குப் பின்னர், 13 ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்தை, இந்தியாவினால் இன்று வரை நடைமுறைப்படுத்தச் செய்ய முடியவில்லை. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது, 13 பிளஸ் என்று இந்தியாவுக்கு போக்குக் காட்டினார். அதற்குப் பின்னர் இப்போது ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் தவிர 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

இலங்கையின் ஒவ்வொரு ஆட்சியாளரும் இந்தியாவுக்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள்.

அவ்வாறான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலை இன்றும் தொடர்வதால் தான், கடந்த செவ்வாயன்றும் ஜெனிவாவுக்கான இந்தியத் தூதுவர் இந்திரா மணி பாண்டே, முன்னைய வாக்குறுதிகளை அரசாங்கம் விரைவாக நிறைவேற்ற



வேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கையின் வாக்குறுதிகளை நம்புகிறதா- அல்லது நம்புவதை விட வேறு வழியில்லை என்ற நிலையில் இருக்கிறதா என்று தெரியவில்லை.

ஜெனிவாவில் மாத்திரமன்றி, இந்திய- இலங்கைத் தலைவர்களின் உயர்மட்டச் சந்திப்புகள் ஒவ்வொன்றிலும், இந்திய உயர்மட்ட தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின், பயணங்களின் போதும், இந்த வாக்குறுதிகள் வலியுறுத்தப்படும். இலங்கையும் சில வாக்குறுதிகளை கொடுக்கும். ஆனால் அவை எதுவும் நிறைவேற்றப்படாது.

இவ்வாறான நிலையில் தான் வேறு வழியின்றி இந்தியா இந்த வாக்குறுதிகளை நம்புவதாக நடிக்கிறதா என்று கருத தோன்றுகிறது. இந்தியப் பிரதிநிதி பாண்டே தனது உரையில்,

சமத்துவமான, நீதியான மற்றும் அமைதியான முறையில் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றவும், 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி மாகாண சபைத் தேர்தலை நடத்தி, தமிழர்களுக்கு மரியாதை மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்வதற்கும் இலங்கை அரசாங்கம் உறுதியளிக்கும் என நம்புகிறோம் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதே கருத்து அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு மேற் கொண்ட பயணத்தின் போதும், வலியுறுத்தப்பட்டது தான். ஆனால், அதற்குப் பின்னர், 13 ஐ நடைமுறைப்படுத்த, மாகாணசபைத் தேர்தலை நடத்த, தமிழர்களின் அபிலாஷைகளை தீர்த்து வைக்க, தமிழர்களின் நீதியான, கௌரவமான கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய இலங்கை அரசாங்கம் எந்த நடவடிககையையும் எடுக்கவில்லை.

ஒவ்வொரு ஜெனிவா கூட்டத்தொடரிலும் உயர்மட்டச் சந்திப்புகளிலும் இந்தியா இந்த விடயங்களை குறிப்பிடுகிறதே தவிர, இந்தியாவும் அதற்கு அப்பால் செல்வதில்லை, இலங்கையும் அதற்கு அப்பால் நகருவதில்லை. இரண்டு தரப்புகளும் தங்களுக்கென ஒரு எல்லைக் கோட்டை வரைந்து கொண்டு, அதற்குள்ளேயே நின்று கொள்கின்றன.

வாக்குறுதிகளை நிறைவேற்றும், அபிலாசைகளை நிறைவேற்றும் என்று இந்தியா நம்பிக் கொண்டிருக்கும் காலம் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழர்களின் அபிலாஷைகளோ, இலங்கையின் வாக்குறுதிகளோ நிறைவேற்றப்படும் நிலை இன்னமும் தோன்றவில்லை.

இதற்கு இலங்கை அரசாங்கம் இந்தியாவின் கரிசனைகளின் மீது கரிசனை கொள்ளவில்லை என்பதா அதனை உதாசீனம் செய்கிறது என்பதா- அல்லது இந்தியாவை ஏமாற்றுகிறது என்பதா?

ஏனென்றால், இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதிகள் பல தசாப்தங்களாக நிறைவேற்றப்படாத நிலையில் அதனை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்காத நிலையில், இரண்டு தரப்புகளும் ஒரு புரிந்துணர்வில் இவ்வாறு செயற்படுகின்றனவா என்ற சந்தேகங்கள் தோன்றுவதற்குக் கூட வாய்ப்புகள் உள்ளன. ஜெனிவாவில் உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே இரண்டு பிரதான அடிப்படைகளின் கீழ் இலங்கை தொடர்பான கொள்கையை இந்தியா எப்போதும் கையாளுவதாக குறிப்பிட்டிருந்தார். அதில் முதலாவது, சமத்துவம், நீதி, கண்ணியம் மற்றும் அமைதியான, தமிழர்களின் அபிலாஷைகளை ஆதரித்தல்.

இரண்டாவது, இலங்கையின் ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை ஆதரித்தல். இந்த இரட்டைக் கோட்பாடு என்பது, இரண்டு தோணியில் பயணம் செய்வதற்கு ஒப்பானது.

ஏனென்றால் தமிழர்களின் அபிலாசைகள், சமத்துவமான முறையில் நீதியான, கண்ணியமான அடிப்படையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்துகிறது. ஆனால், தமிழர்களின் அபிலாஷைகளை அவ்வாறு நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராக இல்லை. அதேவேளை இன்னொரு பக்கம் இலங்கை அரசாங்கத்தின் இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதில் இந்தியா உறுதியாக இருக்கிறது.

தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை அரசாங்கத்தின் இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்த இந்தியா தயாராக இல்லை. அதே வேளை, தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி வைக்க இலங்கை அரசும் தயாராக இல்லை.

இவ்வாறான நிலையில், இந்தியாவின் இரட்டைக் கொள்கை என்பது முற்றிலும் இலங்கை அரசாங்கத்துக்குச் சார்பான ஒன்றாக இருக்கிறதே தவிர, பெயருக்குத் தான் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைப் பற்றிப் பேசுகிறது.

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் நோக்கம் இந்தியாவுக்கு இருந்திருந்தால், அதற்கு புதுடெல்லி வேறு வகையான அணுகுமுறைகளை கையாண்டிருக்கும்.

அத்தகைய அணுகுமுறையை பரிசீலிப்பதற்கு இந்தியா இன்னமும் தயாராக இல்லை. இனிமேலும் அவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுக்குமா என்பதிலும் நம்பிக்கை இல்லை. இத்தகைய சூழலில், இந்தியா அடுத்தடுத்த தசாப்தங்களிலும் கூட தமிழர்களின் அபிலாஷைகளை இலங்கை அரசு நிறைவேற்றும் என்று நம்பிக் கொண்டு அறிக்கைகளை தான் வெளியிட முடியுமே தவிர தமிழர்களின் நலன் சார்ந்தோ அவர்களின் தீர்வு சார்ந்தோ எந்த வகையிலும் செயற்பட முடியாது.

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இலங்கைத்தீவில் அமெரிக்கா - சீனா போட்டியும் சனல் 4 காட்சியின் அரசியலும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– T.K.கணேசலிங்கம் –



இலங்கை அரசியல் மீளவும் ஒரு கொதி நிலைக்குள் அகப்பட்டுள்ளதாகவே தெரிகிறது. சனல்-4 இன் இரண்டாவது காட்சியானது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் பற்றிய உரையாடலை வெளிக்கொண்டு வந்துள்ளதாகவே உணரப்படுகிறது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நிகழ்ந்த போதும் அதற்கான விசாரணைகளின் நிகழ்ந்த போது இத்தகைய உரையாடல் மேலெழுந்தது.

ஆனால் அப்போதிருத்த ஆட்சியாளர்கள் அதற்கான நியாயாதிக்கத்தை பலவீனப் படுத்தியதுடன் சுதந்திரமான விசாரணைகளை சாத்தியப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் இலங்கையின் உள்நாட்டு அரசியலில் பிராந்திய மற்றும் சர்வதேச தலையீடு ஏற்பட வழி வகுத்துள்ளது.

இலங்கையின் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் உள்நாட்டு பொறிமுறைக்கு உட்பட்ட விசாரணை சாத்தியப்படுத்தும் சூழ்நிலை இல்லாததனால் சர்வதேச விசாரணை அவசியம் என்பதை கோரியுள்ளார். இது இலங்கைத் தீவுக்குள் முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் விசாரணைக்கான நியாயப்பாட்டினை வெளிப் படுத்தியுள்ளது.

இக்கட்டுரை உயிர்த் ஞாயிறு தாக்குதலின் சனல் 04 தற்போது ஏன் அதிகமாக முதன்மைப்படுத்தப்படுகிறது என்பதை தேடுவதாக உள்ளது.

தற்போது வெளியான சனல்-4 இன் (Sri Lanka's Easter Bombings: Dispatches) தகவல்கள் இலங்கைப் பரப்பில் உரையாடப்பட்ட விடயங்களாகவே உள்ள போதும், புதிய தகவல்கள் இல்லாமலில்லை என்றே தெரிகிறது. குறிப்பாக இத்தாக்குதலை நிகழ்த்துவதற்கான திட்டமிடலாளர்கள் பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் குறித்த அரசியல் தலைமைகளின் செயலாளர் ஆஸாத் மௌலானா மூலமாகவும் புலனாய்வு அதிகாரிகள் மூலமாகவும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கான திட்டமிடலில் புலனாய்வு அதிகாரி சுரேஸ் சலே பற்றிய தகவல்கள் அதிகமாக ஆசாத்தினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்ளும் நோக்கில் நாட்டை தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்வதற்காகவே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டன என்ற கருதுகோளின் அடிப்படையில் சனல்-4 காணொளி வெளியாகியுள்ளது.

அதன் உள்ளடக்கங்களில் தாஜ் சமுத்ரா ஹோட்டலின் தாக்குதல்தாரி அதனைத் தவிர்க்க முயற்சித்ததாக தெரியவருகிறது. தாஜ்சமுத்தா இந்தியர்களுக்கானது என்றும் இதனாலேயே அதன் மீதான தாக்குதல் தவிர்க்கப்பட்டதாக ஊடகங்களில் அதிக செய்திகள் பகிரப்படுகிறது. அவ்வாறாயின் தற்போதைய உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பிருப்பதாக கூறப்படுவது சரியானதா என்ற கேள்வி நியாயமானதே.

ஆனால், தாக்குதலுக்கு இரு வாரங்களுக்கு முன்னர் இந்தியப் புலனாய்வுத் துறை தாக்குதல் தொடர்பில் இலங்கை ஆட்சியாளர்களுக்கு எச்சரித்திருந்தமை கவனத்திற்குரியதாகும். அவ்வாறே தற்போது மீண்டும் ஓர் இனக்கலவரம் ஏற்படப் போவதாக இந்தியப்புவனாய்வுத் துறை எச்சரித்திருப்பது தாக்குதல் நிகழப் போகிறதென்பது ஏற்றுக் கொள்ளலாம் அல்லவா? அல்லது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில்

இந்தியா தொடர்புபட்டது போல் மீளவும் நிகழப் போகும் இனக்கலவரத்திற்கும் இந்தியத் தொடர்பு உள்ளதா என்ற சந்தேகம் நியாயமானதாவே தெரிகிறது. இதனை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் வடக்குக்கு விஜயம் செய்த போது சில தரப்புக்களுடன் உரையாடும் நிலையில் இது தொடர்பில் கேட்டறிந்து கொண்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.



அப்படியாயின் மதக்கலவரத்தை இந்தியா தூண்ட முயலுகிறது. என்ற கேள்வியை புறந்தள்ளி விட முடியுமா? கடந்த காலத்தில் வடக்கு கிழக்கிலும் ஏனைய பிரதேசங்களிலும் நிகழ்ந்த தாக்குதலுடன் மட்டுமல்லாது தமிழ் மிதவாத மற்றும் தீவிரவாத அரசியல் தலைவர்களது படுகொலையுடன் அத்தகைய கேள்விகள் எழுப்பபடுவது தவறானதாக இருக்குமா என்பது முக்கியமான செய்தியாகும்.

அது தொடர்பில் 2009 போர் முடிந்த பிற்பாடு ஆயுதக்குழுக்களின் உறுப்பினர்கள் அத்தகைய உரையாடலை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் தற்போது எழுந்துள்ள சனல்-4 காட்சிகள் இலங்கையின் அரசியல்வாதிகளை மட்டுமல்ல இந்தியப் புலனாய்வுப் பிரிவினரையும் கேள்வி எழுப்பியுள்தாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. எதுவாயினும் இலங்கையின் அரரியலுடன் இந்தியா ஒன்றிணைந்துள்ளது என்பதை மறுக்க முடியாது.

தற்போது சனல்-4 ஏன் அவசரமாக வெளியாகியுள்ளது என்ற கேள்வி தவிர்க்க முடியாதது. அதனை விரிவாக நோக்குவது அவசியமானது. முதலாவது, இலங்கைத் தீவின் அரசியலில் பொது ஜனப் பெரமுன (மொட்டுக்) கட்சி மீள் எழுச்சிக்கான நகர்வுகளை அண்மைய வாரங்களில் முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது. அதன் உறுப்பினர்களது அண்மைய சந்திப்பும் உரையாடலும் ஊடகப்பரப்பில் அதன் பிரச்சாரமும் அதிக முக்கியத்துவம் பொருந்தியதாக உள்ளது. எவ்பாவற்றுக்கும் மேலாக இலகைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொறகொட ராஜ பக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்புள்ளதாக தெரிவித்திருந்தார்.

ஏறக்குறைய அடுத்து வரவிருக்கும் எந்த தேர்தலாக அமைந்தாலும் அதனை எதிர் கொண்டு வெற்றி பெற மொட்டுக்கட்சி தயாராகி விட்டது என்பதை அனைத்துத் தரப்பும் உணரக் கூடியதாக அமைந்திருந்தது. மொட்டுக்கட்சி ஆட்சி அமைத்தால் இலங்கைத் தீவை சீனா ஆட்சி செய்வதாகவே அமையும் என்ற புரிதலுடன் அமெரிக்காவும் அதன் மேற்கு நட்பு நாடுகளும் கருதுகின்றன.

தற்போது இந்தோ-பசுபிக் தந்திரோபாயத்திற்குள் நகரும் இலங்கைத்தீவு சீனா பக்கம் சாய்ந்து விடும் என்ற கருத்துடனே மேற்குலகம் இயங்குகிறது. அதற்கான முன்னாயத்தங்களை சீனாவும் ராஜ பக்ஷாகளும் அண்மைய காலங்களில் மேற்கொண்டு வருகின்றனர். அதனுடன் தற்போதைய ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரும் உபாயத்தையும் ராஜ பக்ஷக்கள் மேற்கொள்வதாக உணரப்படுகிறது.

அதாவது மேற்குவகத்தின் நட்புச் சக்தியான ஜனாதிபதியை மீளவும் மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியாக்க வேண்டும் என்ற அமெரிக்காவின் திட்டத்தை தகர்க்கும் விதத்தில் ராஜ பக்ஷக்கள் செயல்படுவதை அமெரிக்கப் புலனாய்வுத் துறை உறுதிப்படுத்தியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதனால் மீளவும் எழுச்சி அடைய முயலும் ராஜபக்ஷாகளையும் அவர்களது முகத் திரையையும் கிழிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே சனல்-4 காட்சிகள் மீளவும் அரங்கேற்றப்பட்டுள்ளது. ,

இரண்டாவது, இதில் இந்தியா தொடர்பில் உள்ள முரண்பாட்டையும் அமெரிக்கத் தூதுவர் வடக்கில் வெளிப்படுத்தியுள்ளமை கவனத்திற்குரியதாகும். இந்தியா சீனா பக்கமா இல்லையா என்பதை விட சீனாவுடன் ஒத்துழைப்பது அவசியமானதென இந்தியா உணர்வதாகவே தெரிகிறது. அதனை அமெரிக்கா விளங்கிக் கொண்டுள்ளது என்பதுடன் அதற்காக இலங்கைத் தீவை சீனாவுக்கு விட்டுக் கொடுக்க முடியாது என்பதை அமெரிக்கா கருதுகிறது. காரணம் இலங்கைத்தீவு இழக்கப்படுமாயின் இந்து சமுத்திரம் அமெரிக்க நலன்களிலிருந்து கைமாறும் நிலை ஏற்படும்.

இவ்வாறு அமெரிக்கா கருதும் நிலையானது ரணில் விக்கிரமசிங்கவால் பாதுகாக்கப்படுமா என்ற கேள்வி தவிர்க்க முடியாதது. ரணில் மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியான பின்னர் சீனா பக்கம் சாயமாட்டார் என்பதற்கு அமெரிக்காவிடம் எத்தகைய உபாயமுண்டு என்பது தெரியாது. பிரதமராக ரணில் ஆட்சியிலிருக்கும் போதே சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சியில் ,இலங்கை கையெழுத்திட்டது என்பதை மறுக்க முடியாது. அது மட்டுமல்ல இலங்கைத் தீவின் புவிசார் அரசியல் நியதியும் இந்தியாவுக்கு எதிரான கொள்கையைக் கொண்ட சக்திகளுடன் கை கேர்ப்பதே வழமையான அரசியலாக உள்ளது. தற்போது இந்தியாவை எதிர்க்கும் நாடுகளில் அமெரிக்காவை விட சீனாவே முதன்மையானது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அப்போது அமெரிக்காவின் நிலை இந்தியாவுக்கானதாகவே அமையும்.

மூன்று, ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை பாதுகாப்பது. இதுவே சீனாவையும் இந்தியாவையும் கையாளும் என அமெரிக்கா கருதுகிறது. வெளிப்படையாக இந்திய நட்பு அமெரிக்காவுக்கு தேவையாக அமைந்தாலும் உள்ளார்ந்த ரீதியில் இந்தியாவின் போக்கினை அமெரிக்கா எதிர் நிலையிலிருந்தே அணுகுகிறது. அதனால் இலங்கைத்தீவை இழப்பது ஒரே சந்தர்ப்பத்தில் இரு பெரும் ஆசிய சக்திகளால் இந்து சமுத்திரம் கைப்பற்றப்படும் நிலை ஏற்படும் என்பதேயாகும். அதனை தடுக்க இலங்கையின் ஆட்சி அமெரிக்காவுக்கு சாதகமானதாக அமைந்தால் அதன் மூலமாக இந்து சமுத்திரத்தை தக்க வைப்பதுடன் இந்திய மற்றும் சீனாவை கையாளலாம் எனவும் அமெரிக்கா கருதுகிறது.

தற்போதைய இலங்கைத்தீவின் அரசியலுக்கு ராஜபக்ஷக்கள் எவ்வளவு பங்கு அளித்தார்களோ அதேயளவுக்கு அமெரிக்காவும் பதில் நகர்வை மேற்கொண்டுள்ளது. சனல்-4 இன் வருகை இந்தியாவையும் நெருக்கடிக்கு தள்ளியுள்ளது. அதிலும் இந்தியப் புலனாய்வுத் துறை மீதான நெருக்கடி அதிகமானதோடு இந்தியாவின் நிலை பற்றிய மதிப்பீடும் மாறியுள்ளது. அதுமட்டுமல்ல இந்தியாவை ராஜபக்ஷக்களுடன் தொடர்பு படுத்தி கணிக்கப்படுத் நிலையை அமெரிக்கா அதிகம் ஏற்படுத்த முயன்றுள்ளது. அதனை சனல்-4.அதிகமாகக் கொண்டுள்ளது.

எனவே சனல்-4 காட்சிகள் உள்நாட்டுச் சக்திகளை மட்டும் கையாளும் நோக்குடன் வெளியாகவில்லை. அது பிராந்திய சக்திகளையும் சர்வதேச சக்திகளது நலன்களையும் மையப்படுத்தி கட்டமைக்கப்பட்டுள்ளது. ,ந்திய,சீனா, அமெரிக்கா என்ற அணிகளுக்கு இடையின மோதலை வெளிக்காட்டுவதுடன் அமெரிக்க நட்பு சக்திகளது தேர்தல் வெற்றியையும் சனல்04 உறுதிப்படுத்த முயன்றுள்ளது. இதனால் ராஜபக்க்களது அரசியல் எதிர்காலம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டதுடன் ரணில் ஆட்சியைப் பாதுகாக்கும் தரப்பாக ராஜபக்ஷக்கள் தொடர வேண்டும் என்ற விரும்பும் எச்சரிக்கையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது மறைமுகமாக தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணையின் அவசியத்தை வெளிப்படுத்தியுள்ளது. அதனை முன்னெடுத்துச் செல்லும் தமிழ் தலைவர்கள் அவசியமாவதுடன் புலம் பெயர்ந்த தரப்பும் இதில் அதிகமான கவனத்தைக் கொண்டு செயல்படுவது தேவையாகத் தெரிகிறது.

கடந்த காலத்தில் தமிழர் அத்தகைய கோரிக்கையை முன் வைக்கும் போது சிங்கள ஆட்சியாளகும் தலைவர்களும் அதனை நிராகரித்திருத்தார்கள். தற்போது சிங்களத் தலைவர்களே அத்தகைய கோரிக்கையை முன் வைத்துள்ளார்கள் தற்போது தமிழ் தலைவர்கள் அதனை ஊக்குவிக்க வேண்டும். அக்கோரிக்கைக்கு ஆதரவாக செயல்பட வேண்டும். அதுவே எதிர்காத்தில் தமிழர் மீதான படுகொலையையும் சர்வதேச மட்டத்தில் விசாரணைக்கு உட்படுத்த உதவும். எஸ் டபிள்யூ ஆர்.டி. பண்டா ரநாயக்கா சமஷ்டியை முன் வைத்த போது தமிழ் தலைவர்கள் ஒற்றையாட்சிக்குள் இயங்க முற்பட்ட அனுபவத்தை கருத்தில் கொள்வது பொருத்தமானது.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு அரசியல் மாத்திரமே தீர்வாகாது

# பொருளாதார ரீதியிலும் அவர்கள் முன்னேற வேண்டும்!

## கனடா - இலங்கை வர்த்தக அமைப்பின் தலைவர் குலா செல்லத்துரை





பிறந்தது முதல் இலங்கையில் அனைத்து வசதிகளையும் இலவசமாக பெற்றுக் கொண்ட எமக்கு யுத்தம் காரணமாக கனடாவுக்கு புலம் பெயர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எவ்வாறிருப்பினும் தற்போது அந்நாட்டில் பொருளாதார ரீதியில் ஓரளவு வெற்றி பெற்றவர்களாக முன்னேற்றமடைந்துள்ளோம். எனவே தான் பிறந்த மண்ணுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என கனடாவிலுள்ள முதலீட்டாளர்களை இலங்கையில் தமது முதலீடுகளை மேற்கொள்ளச் செய்வதற்கான பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கனடா இலங்கை வர்த்தக அமைப்பின் தலைவர் குலா செல்லத்துரை தெரிவித்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசியல் மாத்திரமே தீர்வாகாது. பொருளாதார ரீதியிலும் அவர்கள் முன்னேற வேண்டும் எனத் தெரிவித்த அவர் தமிழ் மக்களும் இந்நாட்டில் சம இனமாக, சமத்துவமாக வாழ வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும் அவர்கள் பொருளாதார ரீதியாகவும் அந்த போராட்டங்களை முன்னெடுத்திருந்தால், முன்னேறியிருக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு தமிழ் வார வெளியீட்டுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் வழங்கிய செவ்வியின் முழு வடிவம் வருமாறு :

கேள்வி: உங்களின் இலங்கை விஜயத்துக்கான நோக்கம் என்ன?

பதில்: மேல் மாகாணத்துக்கும், வட மாகாணத்துக்கும் பொருளாதார கட்டமைப்பில் மாற்றங்கள் காணப்படுகின்றன. வடக்கில் பொருளாதார மேம்பாடுகளை கட்டியெழுப்பினால் அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தைரியமும், மனோபலமும் கிடைக்கும் என்று நம்புகின்றோம். சமநிலையற்ற பொருளாதாரத்தை வைத்துக் கொண்டு எம்மால் போராட முடியாது. அதற்கமைய இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் அந்த மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே நாம் இங்கு வந்திருக்கின்றோம்.

கனடாவிலிருந்து வர்த்தக ஊக்குவிப்புக்களை கொண்டு வருவதற்காக என்னை அதற்கான பிரதிநிதியாக இலங்கை அரசாங்கம் நியமித்திருக்கிறது. அங்குள்ள தமிழர்களிடம் மாத்திரமின்றி, பாரிய நிறுவனங்களிடமும் கலந்துரையாடி இலங்கையில் முதலீடுகளை ஊக்குவிப்பதே எனக்கு வழங்கப்பட்டுள்ள பணியாகும். எந்தளவுக்கு வெளிநாட்டு கம்பனிகள் இங்கு முதலீடுகளை மேற்கொள்கின்றனவோ, அந்தளவுக்கு எமக்கு பாதுகாப்புக்கள் அதிகரிக்கின்றன.

குறிப்பாக தமிழ் மக்களின் உரிமைகளுக்காக அந்த நாடுகள் குரல் கொடுக்கும். அத்தோடு இலங்கைக்கு மிகவும் அயல் நாடான இந்தியாவுடன் இணைந்து வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் இங்குள்ள இளைஞர்கள் சிறந்த எதிர்காலத்தை தேடி வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டிய தேவை இருக்காது.

கேள்வி : புலம் பெயர் தமிழ் மக்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் மீது அதிருப்தி காணப்படுகிறது. அவ்வாறிருக்கையில் எவ்வாறு அவர்களை இலங்கையில் முதலீடுகளை மேற் கொள்ள ஊக்குவிக்கப் போகிறீர்கள்?

பதில்: யுத்தத்தின் வடுக்களின் காரணமாகவே அந்த அதிருப்தி காணப்படுகிறது. எனினும் அவற்றையே நினைத்துக் கொண்டிருப்பதால் பாதிக்கப்பட்ட மக்களால் முன்னேற முடியாது. எனவே அந்த எண்ணங்களிலிருந்து சற்று வெளியேறி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு உதவ வேண்டும். இந்த நிலைப்பாட்டை சகல புலம் பெயர் ஈழத்தமிழ் மக்கள் மத்தியிலும் கொண்டு சென்றால், அவர்களின் முதலீடுகளை ஈர்க்க முடியும் என்று நம்புகின்றேன்.

தொடர்ந்தும் இவ்வாறே சிந்தித்துக் கொண்டிருந்தால் முன்னேற முடியாது. உரிமைகளுக்காக ,லங்கை அரசாங்கத்திற்கெதிராக போராட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் அதற்காக வடக்கு கிழக்கு மக்களை கைவிட்டு விடக் கூடாது. கனடாவில் கூட இவ்வாறான மோசமான பின்னணிகள் காணப்படுகின்றன. எனினும் அந்நாட்டு அரசாங்கம் அதற்கான மாற்று வழிகளை ஆராய்கிறது. ஆனால் இலங்கை அரசாங்கம் அவ்வாறு எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. பொருளாதார ரீதியில் தமிழ் மக்கள் தங்களை பலப்படுத்திக் கொண்டால் அவர்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கப்படும். அதற்காக உதவ நாம் தயாராக இருக்கின்றோம்.

கேள்வி: இதற்கான முறையான திட்டமிடல்கள் எவையேனும் உள்ளனவா?

பதில்: அதற்காக வெளிநாடுகளில் அபிவிருத்தி நிதியங்களை ஸ்தாபிக்க தீர்மானித்திருக்கின்றோம். இலங்கையிலும் அதனை வெளிப்படை தன்மையுடன் நிர்வகிக்கக் கூடிய தரப்புடன் இணைந்து அந்த நிதியை பல்துறை தொழிற்துறைகளில் முதலிடத் தீர்மானித்திருக்கின்றோம். யுத்த காலத்தில் புலம் பெயர்ந்தவர்களில் கணிசமானவர்களே முன்னேற்றமடைந்துள்ளனர். அவர்கள் உதவ முன் வருவதைப் போன்று அவர்களது அடுத்த தலைமுறையினர் உதவுவார்கள் எனக் கூற முடியாது. எதிர் பார்க்கவும் முடியாது. எனவே தற்போது கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கேள்வி: எந்தெந்த துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றீர்கள்?

பதில்: மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களில் முதலீடுகளுக்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டால் அது தொடர்பில் அவதானம் செலுத்துவோம்.

ஆனால் எமது இலக்கு சிறு மற்றும் நடுத்தர முதலீடுகளாகும். உயர் மட்டத்தில் வாய்ப்புக்கள் கிடைத்தால், அவை தொடர்பிலும் அவதானம் செலுத்துவோம்.

கேள்வி: எந்த பிரதேசங்களில் முதலீடுகளை மேற்கொள்ள அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருக்கிறது?

பதில்: அரசாங்கத்தால் 3 பிரதேசங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற்சாலை காணப்பட்ட இடத்தில் வரி விலக்கு வலயம் உருவாக்கித் தரப்படும். அதில் சுமார் 150 ஏக்கர் காணியை வழங்க அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. அந்த இடத்தில் எவ்வாறான திட்டங்களை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக 3 குழுக்களை நியமிக்க திட்டமிட்டிருக்கின்றோம். உலகளாவிய ரீதியிலுள்ள பொருளாதார அனுபவம் மிக்கவர்களை உள்ளடக்கியதாக அந்த குழுக்கள் காணப்படும்.

அவற்றில் முதலாவது சிறிய மற்றும் நடுத்தர பொருளாதார மேம்பாட்டுக்குழு, கல்வி மேம்பாட்டு குழு மற்றும் முதலீடுகள் மற்றும் நிதியங்கள் தொடர்பான குழு என்பவை உள்ளடங்குகின்றன. இந்த குழுக்கள் எந்தெந்த இடங்களில் எந்தெந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம் என்பதை பரிந்துரைக்கும்.

பரந்தனிலும் சுமார் 200 ஏக்கர் காணி அரசினால் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். அங்கு பண்ணைத் தொழில் மற்றும் உர உற்பத்தி போன்றவற்றை முன்னெடுத்தால் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. புவிசரிதவியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டே இந்த திட்டமிடல்கள் முன்னெடுக்கப்படும்.

அதே போன்று மாங்குளத்திலும் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் பரிந்துரைத்திருக்கின்றது. அங்கு நவீன நகர மயமாக்கல் திட்டங்களை முன்னெடுக்க முடியும். இவை எமது யோசனைகள் மாத்திரமே. இவை தொடர்பில் ஆழமாக ஆராய்ந்தே இறுதி தீர்மானங்கள் எடுக்கப் பட்டு, வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும். தற்போது வரை இந்த 3 இடங்களையே அரசாங்கம் பரிந்துரைத்திருக்கின்றது. இனி வரும் காலங்களில் திருகோணமலையில் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் பாரிய முதலீடுகளை மேற் கொள்வதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.

கேள்வி: அண்மையில் வெளிநாட்டு நிறுவனமொன்று மன்னாரில் காற்றாலை மின்உற்பத்தி திட்டத்தை ஆரம்பித்த போது அதற்கு அந்த பகுதி மக்களால் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன. அவ்வாறிருக்கையில் உங்களால் நடைமுறைப்படுத்தப் படும் வேலைத்திட்டங்களையும் மக்கள் எதிர்த்தால் அதனை எவ்வாறு கையாளப் போகின்றீர்கள்?

பதில்: எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்கான காரணம் என்ன என்று கேட்டால் அந்த மக்களிடம் அதற்கான பதில் இருக்காது. எமது வேலைத்திட்டங்களுக்கும் அவ்வாறு எதிர்ப்புக்கள் ஏற்பட்டால், அவற்றை எல்லாம் கைவிட்டு வேறு நாடுகளுக்குச் செல்வோம். அதனால் எமக்கு எவ்வித இழப்புக்களும் ஏற்படப் போவதில்லை. ஆனால் அனைத்தையும் எதிர்த்து எதை வெற்றிக் கொள்ளப் போகின்றார்கள் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். வருமானம் எமது எதிர் பார்ப்பல்ல.

கேள்வி: அண்மையில் இலங்கையில் கறுப்பு ஜீலை அனுஷ்டிக்கபட்ட போது அது தொடர்பில் கனேடிய பிரதமரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தின. தொடர்ச்சியாக கனடா அரசாங்கத்தால் வெளியிடப்படும் இவ்வாறான கருத்துக்களால் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரும் உங்களைப் போன்றவர்களுக்கு ஏதேனும் இடையூறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதல்லவா?

பதில்: கருத்து சுதந்திரம் அனைவருக்கும் பொதுவானதாகும். அதற்காக அவர்களினாலோ அல்லது அதற்கு பதிலளிக்கும் இலங்கை அரசியல்வாதிகளினாலோ உயர் மட்டத் தீர்மானங்களை எடுக்க முடியாது. ஒவ்வொரு வரும் தொடர்ச்சியாக இவ்வாறான கருத்துக்களை கூறிக் கொண்டு தான் ருப்பார்கள். எனவே அவற்றை பொருட்படுத்தாது கடந்து செல்ல வேண்டும்.

கேள்வி: உங்களது முதலீடுகள் ஏன் வடக்கு கிழக்கை மாத்திரம் இலக்காகக் கொண்டுள்ளது. இலங்கையின் ஏனைய பகுதிகளில் முதலீடுகளை மேற்கொள்ளும் எதிர்பார்ப்பு இல்லையா?

பதில்: மலையகம், தெற்கு உள்ளிட்ட சகல பகுதிகளிலும் எம்மால் முதலீடுகளை மேற்கொள்ள முடியும். ஆனால் வடக்கு, கிழக்கில் மாத்திரமே சமநிலையற்ற பொருளாதாரம் காணப்படுகிறது. எமது ஆரம்பம் வடக்கு, கிழக்கை மையப்படுத்தியதாகக் காணப்படுகிறது. படிப்படியாக ஏனைய பகுதிகளில் முன்னெடுக்கப்படும். குறிப்பாக சிங்களவர்கள், தமிழ் மக்களின் கவனம் பொருளாதாரத்தையும், அதனை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சியிலும் சென்று விடக் கூடாது என்பதில் குறியாகவுள்ளனர். எனவே தான் மதம் அல்லது இனம் சார்ந்த பிரச்சினைகளை தினமும் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றனர். நாமும் அதில் சிக்கிக் கொண்டே இருக்கின்றோம். அந்த பிடியிலிருந்து வெளியேறி முன்னேற வேண்டும். தமிழ் மக்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். பிரிவினையை ஏற்படுத்தவோ, போராட்டங்களுக்காகவோ நாம் இங்கு வரவில்லை. தற்போது இலங்கைக்கு வர வேண்டிய கட்டாயம் எமக்கில்லை. ஆனால் ஆரம்ப காலக் கட்டத்தில் எம்மால் செய்ய முடியாமல் போனவற்றை இப்போதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலேயே நாம் வருகை தந்திருக்கின்றோம். புலம் பெயர்ந்து அங்கு சென்று தொழிற்துறையில் ஓரளவு வெற்றி பெற்றவர்களாக இன்று இருக்கின்றோம். அந்த வெற்றியை எம் மக்களுடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே எமது இலக்கு என்றார்.

நன்றி:- வீரகேசரி

உ
அருள்மிகு



# ஸ்ரீ சொர்ணாகர்ஷண ஞான வைரவர் கோவில்

# அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

## ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் அடியார்களே!

நிகழும் மங்கள கரமான சோபகிருது வருடம் புரட்டாதி மாதம், 6 ஆம் நாள் (22-09-2023) வெள்ளிக்கிழமை முதலாக (02-10-2023) திங்கள்கிழமை மஹாபரணி நட்சத்திரம் வரை 11 தினங்களுக்கு காலையும் மாலையும் அலங்கார உற்சவம் சிறப்பாக நடைபெற ஸ்ரீ ஞான வைரவர்ப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளது. அடியார்கள் அனைவரும் வந்து தரிசித்து அருள் பெறுமாறு வேண்டுகிறோம்.

பரமனை மதித்திடாப் பங்க யாசனன் ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியுமகந்தையுங் கொண்டு தண்டமுன் புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## 21/09/2023

காலை 7.00: ஸ்ரீ சிந்தாமனி விநாயகருக்கு நவகலச அபிஷேகம்.
மாலை 5.00: புண்யாகவாசனம், கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி.

## திருவிழா ஆரம்பம்

SEP22 வெள்ளி காலை 8:30 a.m. நவகலச 108 சங்காபிஷேகத்தோடு திருவிழா ஆரம்பம்

**சப்பறம்**
SEPT 30 சனி
மாலை 8:00 p.m.

**தேர்**
OCT 01 ஞாயிறு
காலை 11:00 a.m.

## திருவிழா பூர்த்தி

மஹாபரணி தீர்த்தம்: OCT 02 திங்கள் காலை 11:00 a.m.
மஹாபரணி மடை: OCT 02 திங்கள் மாலை 8:00 p.m.

**பூங்காவனம்**
OCT 03 செவ்வாய்
மாலை 6:00 p.m.

**நாகதம்பிரான் மடை**
OCT 04 புதன்
மாலை 8:00 p.m

**திருவிழா நாட்களில் பூஜை நேரங்கள்**

காலை: 7:30 உதயபூஜை. 8:30 நவகலச அபிசேகம். 9:30 மூலவர்பூசை.
10:00 வசந்தமண்டப பூசை, சுவாமி வீதிவலம்வருதல். 12:00 உச்சிகால பூஜை.
மாலை: 5:00 சாயரட்சை பூஜை. 6:00 நவகலச அபிசேகம். 7:00 மூலவர்பூசை.
7:30 வசந்தமண்டப பூசை, சுவாமி வீதிவலம்வருதல். 9:00 சயன பூஜை.

திருவிழா நாட்களில் அடியார்கள் அனைவர்க்கும் இறைவனின் திருவருட்பிரசாதமும் வழங்கப்படும். அடியார்கள் திருவிழா நாட்களில் அபிசேகத்திற்குரிய பால், தயிர், இளநீர், பழங்கள், பூக்கள், அன்னதான பொருட்களை கொடுத்து திருவிழா பூஜைகள், அபிசேகங்கள், உற்சவங்களில் குடும்பத்தோடு கலந்து வைரவப்பெருமானின் திருவருள் பெற்று வளம் பெறுக.
வைரவர் வழிபாடு கைமேற்பலன்.

கூடுதல் விபரங்களுக்கு - தொலைபேசி: 647-351-6757 | 416-520-2056 | வலைத்தளம்: www.gnanabhairavar.ca
450 Taunton Road East, Oshawa, Ontario, L1K 1A8

இங்கனம் சிவப்பணியில் ஆலய நிர்வாகிகள்.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே! திறமையான செயல்களால் புகழும், அந்தஸ்தும் உயரும். திடீர் பயணங்கள் ஏற்படலாம். வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும் போதும் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் கூடுதலாக பணியாற்ற வேண்டும். உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் தொடர்பான விஷயங்கள் தாமதப் பட்டாலும் பொறுப்புகள் அதிகரிக்கும். கடவுள் வழிபாடு செய்து வரவும்.

ரிஷபராசி அன்பர்களே! எதிர்ப்புகள் அகலும். எல்லா நலன்களும் உண்டாகும். விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை. தனாதிபதி குருவின் சஞ்சாரத்தால் பணவரத்து அதிகரிக்கும். பயணம் மூலம் லாபம் கிடைக்க பெறுவீர்கள். அரசாங்கம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பல விதத்திலும் புகழ் கூடும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும்.

மிதுனராசி அன்பர்களே! எதிர் பார்த்த காரியம் வெற்றிகரமாக நடந்து முடியும். எவ்வளவு திறமையாக செயல்பட்டாலும் பாராட்டுக்கு பதில் விமர்சனம் கிடைக்கும். பிடிவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் மெத்தன போக்கு காணப்படும். குடும்பத்தினரின் செயல்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்நண்பர்களுடன் இருந்த பகை நீங்கும்

கடகராசி அன்பர்களே! உங்களின் சொல்லாற்றலும், செயலாற்றலும் அதிகரிக்கும். தடைபட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வீண் மன குழப்பங்கள் ஏற்பட்டாலும் முடிவில் தெளிவு உண்டாகும். வீண் கனவுகள் தோன்றும். தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்கள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சின்ன விஷயத்திற்காக கூட அலைய வேண்டி இருக்கும். பணிச்சுமை காரணமாக திடீர் கோபம் உண்டாகலாம்.

சிம்மராசி அன்பர்களே! நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். தைரியம் உண்டாகும். தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். தேவையான பண உதவி கிடைப்பதிலும், உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும். குடும்பத்தில் திடீர் பிரச்னைகள் ஏற்படலாம். குடும்ப செலவுகள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்கள் மூலம் வர வேண்டியவை தாமதப்படும்.

கன்னிராசி அன்பர்களே! வீண் கவலை அகலும். எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டாகும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில், வியாபாரம், லாபகரமாக நடக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் செயல் திறமை மூலம் கடின பணிகளையும் எளிதாக செய்து முடிப்பர்.

துலாம்ராசி அன்பர்களே! காரிய வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். உங்களது எண்ணப்படியே எதையும் செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். மற்றவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். கவுரவம் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் போட்டிகளை திறம்பட சமாளிப்பீர்கள். உத்யோகத்தில் தங்களது திறமையால் அலுவலக பணியை சிறப்பாக செய்வர். சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு விளக்கேற்றவும்.

விருச்சிகராசி அன்பர்களே! கடும் முயற்சிக்கு பிறகு நல்ல பலன்கள் உண்டாகும். இழுபறியாக நின்ற காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். அவ்வப்போது ஏதாவது தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தொழில், வியா பாரத்தில் சற்று கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். கடன் பிரச்னைகள் குறையும். உத்யோகஸ்தர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். திறமையான செயல்கள் மூலம் பாராட்டு கிடைக்கும்.



தனுசுராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். சுய நம்பிக்கை அதிகரிக்கும். வழக்குகளில் இருந்து வந்த மந்தநிலை மாறும். மனதை கவலை கொள்ளச் செய்த பிரச்னைகளில் எதிர்பாராததிருப்பங்கள் ஏற்படும். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். சிறப்பாக செயல்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். உத்யோக வாய்ப்புகள் வரும்.

மகரராசி அன்பர்களே! நீங்கள் எடுக்கும் விடாமுயற்சி நல்ல வெற்றியை கொடுக்கும். எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். விட்டு சென்ற நண்பர் மீண்டும் வந்து சேர்வார். சுபச் செலவு ஏற்படும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். கடன் பிரச்னைகள் நீங்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும்.

கும்பராசி அன்பர்களே! கடுமையான முயற்சிகள் மேற்கொள்வது குறையும். வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவு உண்டாகும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான நிலை இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் எதிர்பாராத தடை ஏற்பட்டு நீங்கும். பணவரத்து அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

மீனராசி அன்பர்களே! சுணங்கி கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். சுப நிகழ்ச்சிகளில் இருந்த தடைகள் அகலும். புத்தி சாதுரியமும், வாக்குவன்மையும் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தை மாற்றலாமா என்ற எண்ணம் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம் பதவி உயர்வு கிடைக்க பெறுவர். குடும்பத்தினருக்கு அத்தியாவசிய தேவை களை பூர்த்தி செய்வீர்கள். தம்பதிகளிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமை குறையும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# முதுகெழும்பு இல்லாத கிழக்கு ஆளுநர்

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனின் செயற்பாடு கண்டிக்கத் தக்கது என்று அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருக்கின்ற கிழக்கின் ஆளுநர் கோழைத்தனமான அறிக்கையை விட்டிருக்கிறார் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார், தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற காடு பேணல் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேலும் தெரிவித்த அவர், யுத்தத்தை சமாதானமாக முடிக்க வேண்டும் என போராடி உயிர் நீத்த திலீபனை நினைவு கூறுகின்ற ஊர்வலத்துக்கு நாட்டிலுள்ள உயரிய சபையான இந்த பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற செல்வராசா கஜேந்திரன் மீது மிலேச்சத்தனமாக தாக்கப்படுவதையும் அதனை பொலிஸார் பார்த்துக் கொண்டிருப்பதையும் நாங்கள் பார்க்கக்கூடியதாக இருந்தது.

அஹிம்சாவாதியை நினைவு கூர்ந்த ஒருவரை தாக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்க முடியாத முதுகெலும்பு இல்லாத கிழக்கு ஆளுநர் முறையற்றது என கூறியிருப்பது கோழைத்தனமானது. அவர் தன்னுடைய அறிவிப்பை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த நாட்டிலுள்ள குடிமக்கள் தமது உரிமையை கேட்டால் அவர்களை பயங்கரவாதி என அடையாளப்படுத்தும் வேலைத்திட்டத்தை பயங்கரவாத சட்டத்தின் மூலம் ஏற்படுத்த அரசாங்கம் பார்க்கிறதுஎன்றார்




# ராஜபக்ஷாக்களுக்கு பாவமன்னிப்பு

(9ம் பக்கத் தொடர்ச்சி) இந்தச் சம்பவமானது ராஜபக்சக்களுக்கும் கர்தினாலுக்குமிடையிலான நெருங்கிய உறவை ரோமுக்குத் தெரியக்கொடுத்தது.

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம் தான் நெருங்கிப் பழகும் ராஜபக்சக்களை பாதிக்க வைக்குமென்று கர்தினால் பதற்ற மடைகிறார். அதனால் தான் குற்றத்தை ஒப்புக் கொள்பவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்கத் தயாராகியுள்ளார். ஆனால், ரணில் விக்கிரமசிங்க தமது காலுக்குள் வசமாக வந்துள்ள பந்தை எவ்வாறு அடிக்கப் போகிறார் என்பதை எவராலும் கற்பனை பண்ண முடியாது.

அடிக்குறிப்பு: ரணில் விக்கிரமசிங்கவின் தந்தையார் எஸ்மன்ட் விக்கிரமசிங்கவின் கூடப்பிறந்த சகோதரரே குருநாகல் பிக்ஷப் ஆகவிருந்த பேராயர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க. 1983 யூலையில் தமிழினப் படுகொலை இடம் பெற்ற வேளையில் அதனைக் கண்டித்து அறிக்கைகள் விடுத்த பேராயர் லக்ஸ்மன் விக்கிரமசிங்க அடுத்த சில மாதங்களில் மாரடைப்பால் காலமானார்.

# கனடா தூதுவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு இந்தியா உத்தரவு

(24ம் பக்கத் தொடர்ச்சி) இந்நிலையில், அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபை செய்தித் தொடர்பாளர் அட்ரினே வாட்சன் கூறுகையில், “ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த இந்தியா மீதான குற்றச்சாட்டுகள் மிகுந்த கவலை அளிக்கின்றன. கனடாவுடன் நாங்கள் தொடர்பில் உள்ளோம், கனடாவின் விசாரணை நடவடி க்கைகள் மற்றும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது மிகவும் முக்கியமான விடயமாகும் என தெரிவித்துள்ளார்.

(8ம்பக்கத் தொடர்ச்சி) மேற்படி கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் இலங்கைக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும் தயாராக இருக்கின்றது' என்றும் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே அவர் மீண்டும் வெகுவிரைவில் இலங்கைக்கு செல்லவுள்ளார்.. அவருடன் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் உதவி நிர்வாக அதிகாரி அஞ்சலி கௌரும் செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# கனடா தூதுவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு இந்தியா உத்தரவு


காலிஸ்தான் குழு தலைவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் இந்தியத் தூதரக அதிகாரியை கனடா வெளியேறும்படி உத்தரவிட்டுள்ள நிலையில் அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவுக்கான கனடா தூதரக அதிகாரியை 5 நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தர விடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான கனடா துணை தூதரை அழைத்த வெளியுறவு அமைச்சகம். இந்தியாவில் உள்ள கனடா தூதரை வெளியேற்றும் முடிவைப் பகிர்ந்தது.

சர்ச்சையின் பின்னணி: இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி மாநிலம் வேண்டும் என காலிஸ்தான் பயங்கரவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இதனை வலியுறுத்தி கனடாவில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு எதிரான செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். கனடாவில் உள்ள இந்திய தூதரகம் முன்பு கடந்த மார்ச் மாதம் அவர்கள் போராட்டம் நடத்தினர்.

காலிஸ்தான் பயங்கரவாதிகளின் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கனடா அரசிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்நிலையில் கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப்பிரிவின் தலைவரும். தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜார் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் கனடாவில் உள்ள இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத் தூதர் அபூர்வா வஸ்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என அவர்களின் போட்டோக்களுடன் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டினர்.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ. 'இந்திய அரசாங்க முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான நம்பத் தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ளன.



என்று கூறினார். இதனை இந்தியா அபத்தமானது என்றும் உள்நோக்கம் கொண்டது என்றும் தெரிவித்துள்ளது. இந்தியாவின் மூத்த தூதரக அதிகாரியை கனடா வெளியேற்றிய நிலையில் அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவுக்கான கனடா தூதரை வெளியேறும்படி இந்தியா கூறியுள்ளது.



### அவுஸ்திரேலியா கவலை தெரிவிப்பு

கனடாவில் சீக்கிய செயற்பாட்டாளர் ஒருவர் கொல்லப்பட்டமைக்கு இந்திய அரசாங்கமே காரணம் என கனடா தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அவுஸ்திரேலியா ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது. அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனிவொங்கின் பேச்சாளர் இதனை தெரிவித்துள்ளார்.

கனடாவில் சீக்கிய செயற்பாட்டாளர் கொல்லப்பட்டமையின் பின்னணியில் இந்தியா இருக்கலாம் என வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து அவுஸ்திரேலியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த விடயம் குறித்து உயர் மட்டத்தில் கரிசனைகளை பரிமாறிக் கொண்டதாக அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியா கனடாவும் பைவ்ஐஸ் உடன்படிக்கை மூலம் தகவல்களை பரிமாறிக்கொள்கின்றன. எனினும் கனடாவின் சந்தேகம் குறித்து ஜி20 மாநாட்டிற்கு அவுஸ்திரேலிய பிரதமர் சென்ற வேளை அவுஸ்திரேலியாவிற்கு தெரியுமா என்பதை அவுஸ்திரேலிய அதிகாரிகள் தெரிவிக்க மறுத்துள்ளனர்.

கனடாவில் இந்திய அரசாங்கத்தின் உத்தரவின் கீழ் ஒருவர் கொல்லப்பட்டுள்ள விவகாரம் அவுஸ்திரேலிய இந்திய வர்த்தக உறவுகள் வேகமாக வலுவடைந்து வரும் நிலையில் அவுஸ்திரேலியாவிற்கு பெரும் தலைவலியாக மாறக்கூடும்.

கனடாவில் சீக்கிய செயற்பாட்டாளர் கொல்லப்பட்டதன் பின்னணியில் இந்திய அரசாங்கம் உள்ளதாக விசாரணைகள் இடம் பெறுவது குறித்து அவுஸ்திரேலிய ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அனைத்து நாடுகளும் இறைமை மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கவேண்டும் என அவுஸ்திரேலிய கருதுவதாக தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி சகாக்களுடன் நாங்கள் நெருக்கமான ஈடுபாடுகளை கொண்டுள்ளோம் எங்கள் கரிசனைகளை உயர்மட்டத்தில் தெரிவித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவில் உள்ள சமூகத்தினர் சிலருக்கு இந்த தகவல் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தும் என்பது குறித்து நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### அமெரிக்கா அதிருப்தி

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த இந்தியா மீதான குற்றச்சாட்டுகள் மிகுந்த கவலை அளிப்பதாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபை செய்தித் தொடர்பாளர் அட்ரினே வாட்சன் தெரிவித்துள்ளார். கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ. காலிஸ்தான் தலைவர் கொலை சம்பவத்தை இந்தியர்கள் நடத்தி இருக்கலாம். கொலைக்கு பின் அவர்களே முக்கிய காரணமாக இருக்கலாம் என குற்றம் சாட்டியுள்ளார்.

இதனால் இந்தியா, கனடா இடையே மோதல் ஏற்பட்டுள்ளமையால், இந்திய தூதரக அதிகாரியை வெளியேற்ற கனடா உத்தரவிட, அதற்கு பதிலடியாக கனடா தூதரக உயரதிகாரியை வெளியேற்ற மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.(22ம் பக்கம் பார்க்க)

